# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஏப்ரல் 2005 ஜீவியம் 10 மலர் 12**

## இம்மாத மலரில்..........

| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| எங்கள் குடும்பம் II | 2 |
| லைப் டிவைன் | 36 |
| இம்மாதச் செய்தி | 42 |
| அன்பர் கடிதம் | 43 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 46 |
| சாவித்ரி | 49 |
| மனமாற்றம் | 51 |
| லைப் டிவைன் - கருத்து | 57 |
| கம்ப்யூட்டர் | 59 |
| அஜெண்டா | 62 |

❀❀❀

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# எங்கள் குடும்பம் II

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

**காலேஜ் நண்பர்கள் கேலி செய்வார்கள்:**

- ✡ பல்வேறு ஊர்களிலிருந்து மாணவர்கள் சேர்வதாலும், இளைஞர்கள் என்பதாலும், பண்பு வேறுபாடு எளிமையாக வெளிவரும். மாணவர்கள் ஓரளவுக்கு அதைச் சுட்டிக்காட்டுவார்கள்.
- ✡ ஒரே குழந்தையாகப் பிறந்தால், வளர்ந்தபிறகு மற்றவர்களுடன் கலந்து பழகத் தெரியாது.
- ✡ காலேஜ், ஹாஸ்டலில் இருந்தால், பலத்தரப்பட்ட மாணவர்களுடன் பழகுவதால் நம்முடைய குறைபாடுகள் குறையும் சந்தர்ப்பம் அதிகம்.
- ✡ பெரியவனுடைய நண்பன் ஒரு வாரம் வீட்டில் வந்து தங்கியபொழுது, அவனுக்குப் பார்ட்னரைப்பற்றியும், கம்பனியைப்பற்றியும், குறிப்பாகப் பெரியவனைப்பற்றியும் அதிகமாகத் தெரிகிறது. நண்பன்என்பதால் உரிமையுடன் பேசுகிறான்; பெரியவன் ஏற்கிறான். பெரியவனுக்குத் தேவையான புத்திமதியைக் கூறுகிறான். அதையே தாயார் சொன்னால் பெரியவன் ஏற்கமாட்டான். நண்பன் கூறும்பொழுது யோசனை பிறக்கிறது; ஏற்கிறான்.
- ✡ நண்பன் கூறியது காலேஜில் கேலி செய்ததை நினைவுபடுத்துகிறது.
- ✡ பழைய நண்பன் மரியாதையாகப் பழகவில்லைஎனக் கோபப்பட்ட பெரியவன், இந்த நண்பன் கூறுவதை ஏற்பது அருள். இவனுடனும் முன்போல் சண்டை போட்டிருந்தால், அது அருளை விலக்குவதாகும்.



- ✡ இந்த நண்பன் கூறியதை ஏற்ற பெரியவன், பிறகு பழைய நண்பனுடன் கோபப்பட்டது, அருளை முதலில் ஏற்றாலும், பிறகு விலக்குவதாகும்.
- ✡ பெரியவன் ஏற்பதும், விலக்குவதும் நண்பனின் நெருக்கத்தையும், அந்தஸ்தையும் பொருத்தது. அவன் கூறும் உண்மையைப் பொருத்ததில்லை.
- ✡ பெரியவனுக்கு acid test சரியான சோதனைக்குரிய இடங்கள்:
  - ❀ சிறியவனைக் கேலி செய்யாமலிருப்பது.
  - ❀ காரியம், நியாயத்தைவிட முக்கியம்என்று நினைக்காமலிருப்பது.
  - ❀ திறமைக்கேற்ற அறிவு பெறுவது.
  - ❀ சின்னபுத்தியைப் போற்றாதது.
  - ❀ பார்ட்னர் தன்னைச் சமமாக நடத்துவதால், தான் நண்பனைச் சமமாக நடத்தவேண்டும்என்று அறியமுடியாமல், நண்பனும் தன்னை உயர்வாக நடத்தவேண்டும்என்ற மனப்பான்மை தவறுஎன அறிவது.
  - ❀ தனக்குத் தெரியும்என்ற மனப்பான்மை.
  - ❀ அவசரபுத்தி.
  - ❀ முன்கோபம்.
  - ❀ *பிறர் குறையைச் சுட்டிக்காட்டுவதை ஏற்கும் மனப்பான்மை.*
  - ❀ *சொல்வது சரியாஎனக் கருதவேண்டும், சொல்பவர் யார்என்பது முக்கியமில்லை.*
  - ❀ கவர்னர் பார்ட்டிக்கு அழைப்பு, டிரஸ்ஸைவிட முக்கியம்.
  - ❀ பார்ட்னரைப் பார்த்துக் கற்றுக்கொள்ளும் மனப்பான்மை.
  - ❀ தம்மைவிடச் சிறியவனைக் கேலி செய்வது தவறுஎன்ற உணர்வு.
  - ❀ தமக்கு வந்த வாய்ப்புக்குரிய குணத்தைப் பெறும் தன்மை.
  - ❀ ஆதாயமனப்பான்மையைவிட முன்வருவது.

எங்கள் ஆபிசில் போன் 3 மணியடித்தால், மெமோ கொடுப்பார்கள்:

- ✡ சட்டம் போட்டால், தண்டனை கொடுத்தால் வேலை நடக்கும்.
- ✡ மனிதன் அவசியத்திற்காக வேலை செய்வான், கடமைக்காக வேலை செய்யமாட்டான்.
- ✡ தானே எடுத்துக்கொண்ட வேலைக்கு - தன் வேலைக்கு self employment - மனிதன் ஆர்வம் காட்டுவான். சம்பளத்திற்கு வேலை செய்தால் ஆர்வம் வேலையிலிருக்காது; சம்பளத்திலிருக்கும்.
- ✡ ஆர்வமில்லாத மனிதனுக்கு ஆர்வத்தை உற்பத்தி செய்ய முடியாது.
- ✡ அவனிடம் வேலை வாங்கமுடியாது.
- ✡ தண்டனைக்குமட்டும் வேலை செய்வான்.
- ✡ *மறைந்து மறந்த பிரம்மம் அருளால் நினைவுபடுத்தப்படுவது, வாழ்வில் ஆர்வமில்லாதவனைத் தண்டித்து வேலை செய்யச் சொல்வதாகும்.*
- ✡ நினைவுபடுத்தும் அருளை மனிதன் புறக்கணிக்கிறான்.
- ✡ தண்டனை கொடுக்கும் அதிகாரியை சிப்பந்தி எதிர்க்கிறான்.
- ✡ பெரியவன் ஆபீசில் memo கொடுப்பார்கள்; கணவர் ஆபீசில் அதுவுமில்லை.
- ✡ Memoவும் கொடுக்காத ஆபீசில் ஆபீசர் கணவர்என்பதும், தண்டித்து வேலைவாங்கும் ஆபீசில் பெரியவன் இன்ஜீனியர்என்பதும் குடும்பத்தின் ஆன்மீகநிலையைக் காட்டுகிறது.
- ✡ அதிர்ஷ்டம் பெற memo கொடுக்கமுடியாது.
- ✡ கணவரும், பெரியவனும் அவர்கள் மனநிலையைவிட்டு வந்து, மாறி அதிர்ஷ்டத்தைத் தாங்களே வரவேற்கும்வரை தாயாருக்கு வேலை.
- ✡ அது என்ன வேலை? அதை எப்படிச்செய்வது?
- ✡ அருள் என்ன செய்கிறது?
- ✡ அன்னை என்ன செய்கிறார்?



- ✡ தாயார் என்ன செய்யமுடியும்?
- ✡ கணவரும், பிள்ளைகளும் என்ன செய்யலாம்?என நாம் சிந்திப்பது நம் வீட்டில் அதிர்ஷ்டம் வரப் பயன்படும்.
- ✡ இந்தச் சிந்தனை சிறக்கும்.
- ✡ *இந்தச் சிந்தனையையும் சமர்ப்பணம்செய்வது மேல்.*
- ✡ சமர்ப்பணத்தால் காரியம் முடிந்தபின் எந்த அஞ்ஞானம், எந்த ஞானமாயிற்றுஎனத் தெரியும்.

இது பிரார்த்தனைக்கு அசையாது:

- ✡ லைசென்ஸ் கையெழுத்தாகிவிட்டது; காசு கொடுத்தால் லைசென்ஸ் கிடைக்கும்என்பதைக் கணவர் வந்து கூறியபொழுது, பிரார்த்தனை செய்யட்டுமா? 3 நாட்கள் பிரார்த்தனை செய்யட்டுமாஎனக் கணவர் கேட்டபொழுது, தாயார் இது பிரார்த்தனைக்கு அசையாது என்கிறார்.
- ✡ எது பிரார்த்தனைக்கு அசையாது? ஏன்?
- ✡ *மனிதன் தெய்வம்; தெய்வத்தின் ஓர் அம்சம். அவன் வேலையை அவன் முடித்தபின் காரியம் நகரவில்லைஎனில் தெய்வத்திடம் கூறுவது பிரார்த்தனை.*
- ✡ *மனிதனே தெய்வம்; அவனுக்குக் கூடிவாராத காரியமில்லை. அவனே தெய்வமென்பதால், அவனால் எதையும் செய்யமுடியும். அவனால் முடிந்ததை முடித்தபிறகு, அவனுடைய மற்ற அம்சங்களை அழைப்பது பிரார்த்தனை.*
- ✡ அவனால் முடிந்தவற்றை அவனே செய்யவேண்டும்.
- ✡ கணவர் செய்யக்கூடியது ஒன்றுண்டு.
  அவர் இலஞ்சத்தை ஆமோதிக்கக்கூடாது; நம்பக்கூடாது.
- ✡ அவர் அதைச் செய்யாமல் பிரார்த்தனை செய்தால் பலனிருக்காது.

✡ அப்படிப் பலன்என இருந்தால், தன் மனம் மாறவேண்டும்என அவருக்குத் தோன்றும்.

❀ பிரார்த்தனை உடனே பலிக்கும்.

❀ பிரார்த்தனை பலிக்கவே பலிக்காது.

இவையிரண்டும் உண்மை.

❀ *நம்மால் முடிந்தவற்றைச் செய்தபின் பிரார்த்தனை உடனே பலிக்கும்.*

❀ அது குறையானால் பிரார்த்தனைக்கு விஷயம் அசையாது.

✡ அன்னையை ஏற்பவர்கள், ஏற்காதவர்களுடைய மூடநம்பிக்கை உள்ளவரானால், எதையும் பிரார்த்தனையால் சாதிக்கலாம்என நினைப்பார்கள்.

✡ பிரார்த்தனை என்றால் என்ன? யார் பிரார்த்திக்கிறார்கள்? எப்படிப் பலிக்கிறது?என அறியாதவர் பேச்சு இது.

✡ மூடநம்பிக்கைகளில் பிரதானமானது பிரார்த்தனை பலிக்கும்என்பது.

✡ அன்னையை நம்பாதவன் இதைப்பார்த்து சிரிப்பது சரி.

✡ கணவர் கணக்கில் சேராதவர்.

✡ குணமிருந்தால் பிரார்த்தனை செய்கிறேன்என்பார்; இல்லாவிட்டால் எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கையில்லைஎன்பார்.

❀ அன்னையை ஏற்றது மெய்.

❀ இலஞ்சமில்லாமல் in-charge ஆபீசர் ஆர்டர் கொடுத்தார்.

❀ *எப்பொழுதும் என்னைக் கைவிட்டதில்லை.*

✡ கணவர் 3 நாட்கள் பிரார்த்தனை செய்ய முன்வந்து, மனைவி, 'பிரார்த்தனைக்கு லைசென்ஸ் அசையாது'என்றபின் சற்று விவாதித்து, இந்தப் பிராஜெக்ட்வரை பொய் சொல்லாமலிருக்கக் கணவர் ஏற்றார். பார்ட்னர் அவரைக் கூப்பிட்டு லைசென்ஸ் கிடைத்ததைக் கூறினார்.



✡ *எவர் அன்னையை ஏற்றாலும், அன்னையை ஏற்ற அளவில் பொய் அவரை விட்டகலும்.*

✡ *பொய்யை அறவே கைவிடாமல் அன்னையை முழுவதும் ஏற்க முடியாது.*

✡ மனைவி ஸ்தானத்தில் கணவனுக்கு அந்த discipline எல்லாம் கொடுக்கும் நிலையில்லைஎன்பதால் பிராஜெக்ட்வரை பொய் சொல்லக்கூடாதுஎனக் கேட்டதைக் கணவர் ஏற்றுக்கொண்டார். முடிவு மனதில் உதித்தவுடன் ஆர்டர் - லைசென்ஸ் - கிடைத்து விட்டது. இந்தச் சட்டம் கணவருக்கு, மனைவிக்கில்லை.

✡ இதே ஆர்டர் பெற மனைவி பொய்யைக் கைவிட, பிராஜெக்ட்வரை பொய்யில்லாமலிருந்தால் கிடைக்காது. குடும்பம் சம்பந்தப்பட்டவரை பொய் சொல்லாமலிருந்தால் ஆர்டர் கிடைக்கும்.

✡ காசு வாங்குபவர் லீவில் போனது; ஆர்டரில் கையெழுத்திட்டது; காசு வாங்காதவர் in-chargeஆக வந்தது; ஆர்டர் கிடைத்தது கவனிக்கத்தக்கது. காசு கேட்க ஆர்டரில் கையெழுத்திட்டுக் காட்டியது, காசில்லாமல் ஆர்டர் பெற உதவியது.

✡ பார்ட்னர் சத்தியசந்தன்; காசு கொடுப்பவரில்லை. தெய்வம் அவரைக் கைவிட்டதில்லைஎன்றாலும், அவருடைய சத்தியம் எளிய மனிதனுடையது. அது ஓரளவு பலிக்கும். இவ்வளவு பெரிய பிராஜெக்ட்டில் பலிக்காது. அன்பர்என்பதால் பலித்தது.

✡ என்னை எப்பொழுதுமே சத்தியம் கைவிட்டதில்லைஎன்பவர்கள் சத்தியத்தைக் கடைப்பிடிப்பவர்கள். அதற்கு லிமிட் உண்டு. அது அவர்களுடைய வாழ்வின் லிமிட்.

✡ *அன்னைசத்தியத்திற்கு லிமிட் இல்லைஎன்றாலும், அது அன்பரின் பர்சனாலிட்டிக்குட்பட்டுச் செயல்படும்.* லிமிட் நாம் ஏற்படுத்துவது.

✡ *சத்தியம் பொது; அளவு வாழ்வும், நமது பர்சனாலிட்டியும் ஏற்படுத்துவது.*

✡ *அன்னையை முதன்மையாக ஏற்பவருக்கு அந்த லிமிட் இல்லை.*

✡ வாழ்வில் சத்தியத்தை ஒரு சிலரே கடைப்பிடிக்க முடியும்.

✡ அன்பர்கள் அனைவரும் சத்தியத்தைக் கடைப்பிடிக்கலாம்.

✡ வாழ்வில் ஒரு சிலருக்கு ஓரளவு உரிய சத்தியம் அன்பரில் அனைவருக்கும் அளவின்றி உரியது.

✡ நாம் சத்தியத்தை நோக்கிப்போனால், ஆர்டர் சத்தியசந்தனை நோக்கிப்போகும்.

✡ *அன்னையை ஏற்றபின் மனத்தளவிலும் பொய்க்கு இடம் தரக்கூடாது.*

✡ பொய் சொல்லாதவர் இலஞ்சம் தரவேண்டியதில்லை.

✡ *எப்பொழுதும், எவரையும், எந்த விஷயத்திலும் அன்னை கைவிட்டது இல்லை.*

**பெண்ணின் சிநேகிதியின் அக்கா பிரச்சினை தானே தீர்ந்தது:**

✡ *நட்பு, பக்திக்குச் சமம்.*

✡ *உயர்ந்த நட்பு தெய்வம் வரம் தருவதுபோல் செயல்படும்.*

✡ நட்பில் பலன் கலந்திருப்பது வழக்கமில்லை.

✡ பெண்பிள்ளைகளைப்போல் கிறுக்காக இல்லை.

✡ அடக்கமானவள்; ஆனால் ஆதாயமனப்பான்மையுள்ளவள்.

✡ தோழியின் அக்கா வாழ்க்கையில் எல்லாச் சிக்கல்களும் உண்டு.

✡ திருமணத்திற்குமுன் வேறொரு பெண் இருக்கிறாள்என்பது முடிவான சிக்கல்.

✡ அத்துடன் பணத்தகராறு.

✡ எந்தத் தகராறு இருந்தாலும் கணவனுடன் வாழ்ந்தால்போதும்எனப் பெண் நினைப்பது பகுத்தறிவுக்கு ஏற்ற நினைவு. பிறர் எடுத்துச் சொல்லவேண்டியதை அவளே ஏற்றுக்கொள்வது மனம் அவளுக்குப் பக்குவப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பக்குவப்பட்ட மனத்திற்குப் பரமன் அருள் உண்டு.



✡ இந்தக் குடும்பத்தில் அருள் வெள்ளமாகப் பாய்கிறது.

✡ இதனுடன் தொடர்புள்ள குடும்பங்கட்கு - நல்லெண்ணத்தால் தொடர்புள்ள - இவ்வருள் கிடைக்கும்.

✡ பெண்ணின் அக்கறை, நட்புணர்வு, நல்லுணர்வு அவர்கட்கு அருளைப் பெற்றுத்தருகிறது.

✡ பெரியவனுக்கும், சிறியவனுக்கும் அக்கறையில்லை. சுயநலம் அக்கறை கொள்ளாது.

✡ சிறியவன் அக்காவும், அம்மாவும் வேட்டுவைப்பதாக நினைக்கிறான்.

✡ பெண் சிநேகிதிக்குச் செய்யும் உதவி, சிறியவனுக்கு வேட்டு வைப்பதாகப்படுகிறது.

✡ ஒருவர் மற்றவர்க்குச் செய்யும் உதவி சுயநலத்திற்கு ஆபத்து. தனக்கு அதனால் எந்த நஷ்டமில்லாவிட்டாலும், சுயநலம் அச்செயலை, தன்னை அழிக்கும் செயலாகக் கருதும்.

✡ சுயநலமான குடும்பம் பெண்ணிற்கு உதவி செய்யும் மனப்பான்மை தோன்றினால், அது சக்திவாய்ந்ததாக இருக்கும்.

✡ பெண்ணுக்கு ஆதாயமனப்பான்மை. அதையும்மீறி எழும் உதவி மனப்பான்மை பெரியதுஎன்பதால், நினைத்தமாத்திரம் காரியம் நடக்கிறது.

✡ இந்த நிகழ்ச்சியை எல்லோர் கோணங்களிலும் ஆராய்வது, ஏன் இப்பலன் இப்படி வருகிறதுஎனத் தெரியும்.

✡ பெண் தானே உதவி செய்ய நினைப்பதால், மாப்பிள்ளை தானே வந்து அடக்கமாகப் பேசி பிரச்சினையைத் தீர்க்கிறார். அதை உடனே வந்து சொல்லவேண்டும்என்பது நன்றி. *நன்றியுள்ள இடத்தில் நல்லது உடனே நடக்கும்.*

**பலனில்லாவிட்டால் ஏன் அன்னையை நாடவேண்டும்என்று பெண் அப்பாவியாகக் கேட்கிறாள்:**

- ✡ **மாமா வீட்டில் திருடக்கூடாதுஎன்றால் ஏன் மாமா வீட்டிற்குப் போகவேண்டும்எனக் கேட்பதில்லை.**
- ✡ ***ஆதாயமனப்பான்மை திருட்டுமனப்பான்மைக்குச் சமம்என எவரும் நினைப்பதில்லை.***
- ✡ **இந்த நல்லபெண் ஆதாயமனப்பான்மைக்கு வெட்கப்படவில்லை.**
- ✡ **ஆதாயமனப்பான்மையிருந்தாலும் அதைத் தெய்வத்திடம் காட்டக் கூடாதுஎன்ற பக்குவமில்லாத பெண்.**
- ✡ **ஆதாயமனப்பான்மை, அதற்காக வெட்கப்படாத மனம் எப்படி வருகிறது?**
  - ❀ **வறுமை.**
  - ❀ **சிறுமை.**
  - ❀ **பற்றாக்குறை.**
  - ❀ **உயர்ந்த பழக்கங்களைப் பார்க்காதது.**
  - ❀ **இயலாமை.**
  - ❀ **எப்படியாவது பிழைத்தால்போதும்என்ற வாழ்வு.**
  - ❀ **எவ்வளவு கீழ்த்தரமாக நடந்தாலும், அனைவரும் அது போலிருப்பதால், அதை மற்றவர்கள் மட்டமாக நினைக்காதது.**
  - ❀ **பண்பு பிறக்கும்முன் வாழ்ந்த சமுதாயங்களின் வாழ்வு.**
- ✡ **கல்கத்தா மாணவர்கள் காப்பியடிக்க உரிமை கேட்டு ஸ்டிரைக் செய்தனர்.**
- ✡ **இலஞ்சம் வாங்க உரிமை கேட்பதுபோலிருக்கிறது ஆதாய மனப்பான்மை.**



- ✡ **மாணவர்கள் காப்பியடித்து டிகிரி பெற்றால், வேலை அந்த டிகிரிக்கு வாராது; வந்தால் நிலைக்காது. அடுத்த தலைமுறையில் காப்பியடிப்பது பலனில்லைஎனத் தெரியும்.**
- ✡ **அடுத்த ஜன்மத்தில் ஆதாயமனப்பான்மை பலனில்லைஎனப் புரியும்.**
- ✡ **சைத்தியப்புருஷன் வெளிவருவது புனர்ஜென்மம்.**
- ✡ **ஒரு முறை சைத்தியப்புருஷன் வெளிவருவது ஓராண்டு ஆயுள் நீடிப்பதாகும்.**
- ✡ **ஆதாயமனப்பான்மை மட்டம்என்று சைத்தியப்புருஷனுக்குப் புரியும். அது ஒரு ஜென்மப்பலன். அந்த அளவுக்கு ஆயுள் நீளும்.**
- ✡ **காவல்காரன் வேலையைவிட்டு விலகியபின் ஆட்களையும், வண்டியையும் கொண்டுவந்து பல சாமான்களை எடுத்ததைத் தடுத்தபோது, "4 காசு கிடைக்கும்என்றுதானே வந்தேன். ஏன் தடுக்கிறீர்கள்?"என அப்பாவியாகக் கேட்டான்.**
- ✡ ***கொள்ளையடிப்பவர் எப்படிச் சுகமாக வாழ்கிறார்கள்என்ற கேள்வியைப் பலரும் கேட்கின்றனர். அவர்கள் கொள்ளைக்காரராக வாழ்கிறார்கள். நல்லவர்கள் அவ்வாழ்வை நாடமாட்டார்கள்என அறியாமல் பேசுகிறார்கள்.***

**கணவர் மனம் மாறியவுடன் ஆபீஸ் சண்டைக்காரன் மன்னிப்புக் கேட்கிறான்:**

- ✡ ***அன்பரில் அருள் செயல்பட ஆரம்பித்தால், பொதுவாக அவருக்கு charm கவர்ச்சி அதிகரிக்கும்.***
- ✡ **கவர்ச்சியால் அதிகம் பேர் அருகே வருவார்கள்.**
- ✡ **அப்படி வருபவர் தங்கள் ஜீவியத்திற்கேற்ப பழகுவர்.**
- ✡ **அன்பர் அதனால் உள்ளே கிளறப்படுவார் (will be disturbed).**

✡ ஏன் பலர் நெருங்கி வருகிறார்கள்என்பதே தெரியாததால், அவர்களால் ஏன் உள்ளே தொந்தரவு எழுகிறதுஎனப் புரியாது.

✡ புரிந்தால் பொறுத்துக்கொள்ள அதிகப் பொறுமை வேண்டும்.

✡ பொறுமையிருந்தால் வருபவர் கூட்டம் பெருகும்.

✡ அவர்களை அன்பர்களாகமட்டும் நடத்தினால் பிரச்சினை வாராது.

✡ நண்பர்களாக, உறவினர்களாகக் கருதினால் சமாளிக்க முடியாத பிரச்சினைகள் எழும்.

✡ கணவர் அன்பரில்லை; அன்பரின் கணவர்.

✡ ஆபீசில் சண்டைக்குவந்தவன் அப்படி வந்தவன்என அவர் அறியவில்லை.

✡ பெரியவன் நண்பன் விஷயத்தில் சொல்லியது சரிஎன்றவர், மனைவி சொல்வதைக் கேட்டுப் பெரியவன் சரியில்லைஎன்றார்.

✡ மனம் பொய்யை நாடியபொழுது, மனைவியின் மெய்யை ஏற்று மனம் மாறிற்று.

✡ இது சொற்பஅளவில் திருவுருமாற்றம் - அன்னையின் அருட்செயல்.

மனம் மெய்யை நாடியவுடன் சண்டை சுமுகமாயிற்று.

✡ வீட்டுச்சூழலில் கணவரும் இயல்பான பொய்யைவிட்டு இறைவனின் மெய்யை ஏற்க முடிகிறது.

✡ அதனால் சண்டை சமாதானமான செய்தி வீட்டிற்குச் - சூழல் உள்ள இடத்திற்கு - வருகிறது.

✡ பொய் மெய்யாக மாறுவது வறுமை வளமாக மாறுவதாகும்.

✡ பெரியவனுக்கு அதுவும் தெரியவில்லை.

✡ நண்பன் எடுத்துச்சொல்லியபின்னும், பெரியவனுக்குத் தான் நண்பனுடன் கோபப்பட்டது தவறுஎனப் புரியவில்லை.

✡ கணவர் சூழலால் மாறுகிறார், பெரியவன் அதுவும் மாறவில்லை.

✡ *கம்பனி கண்ணுக்குத் தெரிகிறது; அன்னையும், அருளும் தெரியவில்லை.*



கணவர் சிறிது மனம் மாறுவதால் பெண்ணும், சிறியவனும் அம்மாவிடம் விபரம் கேட்கிறார்கள் :

அண்ணனை மடக்க வழி சொல்லுங்கள் :

ரைட்டர் துரோகம் செய்கிறார் - வலிய செய்த உதவி :

✡ எந்தக் காரியமும் அத்துடன் முடியாது, தொடரும். அதனால் கணவர் செய்த நல்ல காரியம் இரு பிள்ளைகளில் தொடர்கிறது.

✡ *காரியம் என்பது infinite அனந்தம்.*

✡ *காலம் உற்பத்தியானபொழுது ஆரம்பித்தது காரியம். காலம் முடியும்பொழுதுதான் அது முடியும். அதுவரை எந்தக் காரியமும் வளர்ந்தபடியிருக்கும்.*

வளராதது காரியமில்லை.

✡ *அப்படி வளரும்பொழுது, அவ்வளர்ச்சியின் அளவு, தன்மை, குணம் காரியத்தைப்பொருத்தது.*

✡ கணவர் கேட்கும் மனப்பான்மை சற்று, பிள்ளைகளில் அதிகமாக இருக்கும்.

✡ மற்றவை கணவர் மனப்பான்மைபோலவேயிருக்கும்.

✡ அவர் கேட்டுவிட்டு மறப்பாரானால், பிள்ளைகளும் கேட்டுவிட்டு மறக்கும். ஆனால், மறப்பது சற்றுத் தள்ளிப்போகும்.

✡ சிறியவன் அண்ணனை மடக்க வழி சொல்லுங்கள் என்கிறான்.

✡ அது கணவர் மனத்திலும், தாயார் மனத்திலும் வேறு ரூபமாக உள்ளது.

✡ கணவர் தம் அந்தஸ்து உயர - மற்றவரை மடக்க - நினைக்கிறார். தாயார் குடும்பம் முன்னுக்கு வரவேண்டும்எனக் கருதுவது தமக்குக் கட்டுப்படாத வாழ்வு கட்டுப்படவேண்டும்என நினைக்கிறார்.

✡ வலிய உதவி செய்தால் துரோகம் செய்யவேண்டும்என்பது சட்டம்.

✡ உதவி பெற்றவர் உதவியைப் போற்றினாலும், உதவி செய்யும் உயர்ந்த நிலையிலுள்ள நண்பரை மன்னிக்க முடிவதில்லை.

✡ அடித்தால் திரும்பி அடி விழும்என்பதுபோல் உதவி துரோகமாக மாறும்.

✡ சேவைஎன்பது மாயை.

✡ இறைவனுக்கே சேவை செய்யலாம்.

✡ மனிதனுக்குச் சேவை பாம்புக்குப் பால்வார்ப்பது.

✡ எவர் வாழ்விலும் உதவி துரோகமாக மாறியதைக் காணலாம்.

✡ *நாம் பெற்ற உதவிக்குத் துரோகம் செய்யவில்லைஎன்றால் நாம் அன்னைக்குரியவராவோம்.*

✡ *இதுவரை நமக்குக் கிடைத்த உதவிகளை நினைத்துப்பார்த்து மனத்தைச் சுத்தம் செய்வது யோகம்.*

இந்தச் சட்டத்திற்கு மாற்றுண்டா?
ஒருவரை அவர் சட்டத்தினின்று திருப்ப அவர்தவிர மற்றவரால் முடியாது. செய்தால் தவறு வரும். அது ஆபத்தாகவுமிருக்கும்.

✡ ஒருவர் என்பது ஒரு ஜீவன்.

✡ நாம் ஒருவரை ஏழையாகப்பார்க்கலாம்; அவருக்கு வசதி வரவேண்டும்என விரும்பலாம்; அது தூயநல்லெண்ணம். ஆனால், அறியாமையின் நல்லெண்ணம். கொச்சைமொழியில் மடத்தனம் எனப்படும்.

✡ ஓர் உதாரணத்தைக் கருதுவோம். ஒரு மாணவனுக்கு நல்ல புத்திமதிகள் கூற இராமகிருஷ்ண உபநிஷதம் படிக்கச்சொல்வது, ஒரு புண்ணியம். அதைவிட நல்ல காரியமில்லை. அவன் ஒரு மாணவன்என்றறியாமல் அவனை வரச்சொல்லி, படிக்கச்சொன்னால், அவன் பள்ளிக்கூடம் போகாமல் வந்திருக்கிறான்எனத் தெரியா



விட்டால், நாம் செய்யும் அவ்வளவு உயர்ந்த நல்லதும் அர்த்தமற்றதாகப்போவதுடன், ஓராபத்தை விளைவிக்கும். அவன் படிப்புக் கெடுவதால், அவன் பெற்றோர் சண்டைக்கு வருவர். பரீட்சையில் தவறியபொழுது, அவனே மனம் கசந்து, "நீங்கள் என் வாழ்வைக் கெடுத்துவிட்டீர்கள்"என்பான்.

✡ ஒருவர் வாழ்வில் அடுத்தவர் புகுந்து நல்லது செய்ய முனைவது தவறா? பாவமா?

✡ அவரே அதைப் பிரியப்பட்டு நாடினால், அவர் சூட்சுமவாழ்வு நமக்குப் புரிந்து, இதனால் அவருக்கு நல்லது நடக்கும்என அறியும் திறன் நமக்கிருந்தால், அவர் விரும்பிப் பலமுறை கேட்டால் செய்யலாம். நாமே அதை வலிய அவருக்குச் செய்வது முதலில் நமக்குத் தீங்கு விளைவிக்கும்; அவருக்குப் பயன் தாராது. இவையிரண்டையும்மீறி நல்லது நடந்தால், அது அவரது ஆத்மாவுக்கு ஏற்படும். அவருடைய கண்ணுக்கோ, நம் கண்ணுக்கோ புலப்படாது.

✡ ஒருவன் தன் கர்மத்தைமீறப் பிரியப்பட்டு, அதற்குரிய முயற்சியை எடுக்க உதவியை நாடினால், இந்தச் சட்டத்திற்கு மாற்றுண்டு.

✡ நாம் விபரம் சொல்லலாம்; முடிவு அவருடையதாக இருக்கவேண்டும்.

✡ வாழ்வில் மனிதன் செல்வது ஓடும் இரயிலில் பிரயாணம் செய்வதுபோன்றது. அவனை இறங்கச்சொன்னால் உயிர் போகும். இரயில் நிற்கும்பொழுது இறங்கச்சொன்னால், அவன் போகும் காரியம் கெடும்.

✡ பிறருக்கு உபதேசம் தவறா? சேவை பாவமா?என்றால் அவர் உன்னுடைய பொறுப்பில் மகன், மாணவன், கட்சிக்காரன், நோயாளி, உன்னைப் பின்பற்றுபவன்என்றிருந்தால், அந்தப் பொறுப்பின் எல்லைக்குள் செயல்படுவது சரி. வெளியே போவது ஆபத்து.

✡ ''நான் என் வாழ்நாள் முழுவதும் அதையே பலமுறை செய்திருக்கிறேன். அவர்கள் பெரும்பலன் பெற்றுள்ளனர்''என ஒருவர்

கூறினால் அவரை, ''உங்களுக்கு வாழ்வில் தொந்தரவு வந்திருக்கிறதா?"என்று கேட்டால், "ஒருவர் தவறாமல் என் உயிரை எடுக்கத் தவறியதில்லை; ஒருவர் என் திருமணத்தைத் தடை செய்தார்; அடுத்தவர் என் வேலைக்கு வேட்டுவைத்தார்; இனியவர் ஒருவர் புரளியை எழுப்பி மானத்தைவாங்கினார்; மற்றொருவர் சூன்யம்வைத்தார்"என்ற பதில் தவறாமல் வரும். *ஒரு ஜீவனை அதன் கர்மத்திலிருந்து காப்பாற்றும் கடமை அவரை சிஷ்யனாக ஏற்றுக் கொண்ட குருவுக்கு உண்டு.* அதற்கும் அவருடைய பூர்வஜென்ம உத்தரவு வேண்டும்.

**நன்றியறிதல்என்றால் என்ன?:**

- ஒருவர் செய்த நல்லதைப் பெற்றவர் thank youஎன்பதை நன்றிஎன அறிகிறோம்.
- ஓர் ஆபீசில் புதியதாய் வந்தவர் அளவுகடந்த பிரபலமாகி, அளவுகடந்து சம்பாதிக்கும்பொழுது, அளவுகடந்த பொறாமையை எழுப்பி, அவரில்லாத நேரம் அவரைப்பற்றிமட்டும் பேசுவது வழக்கமாகிவிட்டது. அப்படிப் பேசுபவர்களில் ஒருவர் அவரால் தீராத வியாதியினின்று காப்பாற்றப்பட்டவர்; அடுத்தவர் தானிழந்த சொத்தை அவரால் திரும்பப் பெற்றவர்; மற்றொருவர் ஆத்மவிளக்கம் பெற்றதுடன் 20 ஆண்டுகளாக TBயிலிருந்த தம்பிக்கு TB குணமானவர்; மற்ற நால்வர் அவருடைய உற்சாகத்தால் அடுத்த பெரிய பட்டம் பெற்றவர்; மற்றொருவர் தகப்பனார் மரணப் படுக்கையிலிருக்கும்பொழுது, 'இன்னும் இரண்டாண்டிருந்தால் தகப்பனார் எனது வீட்டில் 2 திருமணங்கள் முடிப்பார்'எனக் கேட்டு தகப்பனாருக்கு ஆயுளை நீடித்தவர்; வேறொருவர் தம்பி, வீட்டை விட்டு ஓடிப்போனவனை, அவரால் திரும்பப்பெற்றவர்; அவர்மூலம் மறைமுகமாக நல்லது பெறாதவர் அங்கில்லை. ஒருவர் வருமானம் அவரால் இருமடங்காயிற்று. அவரும் அதைவிட்டுப்போய் பல ஆண்டுகளாய்விட்டன. அவரைப்பற்றிய பேச்சு ஓயவில்லை. அவரைப்பற்றி மட்டுமே விவாதிப்பார்கள்; குறை கூறுவார்கள்; பொறாமைப்படுவார்கள். தகப்பனார் ஆயுள் நீண்டவர்மட்டும் அதில் கலந்து கொள்ளவில்லைஎன வற்புறுத்தியபோது, ''என்னால் அதுமட்டும் முடியாது"என்றார்; அது நன்றியறிதல்.
- பெற்ற பலனுக்கு நேரடியாகத் துரோகம் செய்வது உலகம்.
- துரோகம் செய்ய முடியாதது நன்றியறிதல்.
- இவர் மனம் தமக்கு உதவியவரை எதிர்த்துப்பேச மறுக்கிறது.
- எதிர்த்துப்பேச மறுக்கும் மனம் அவரை நினைத்துப் பூரித்துப்போக வெகுதூரம் செல்லவேண்டும்.
- தானிழந்த வேலையை மீண்டும் பெற ஒருவர் உணர்ச்சிபூர்வமாக நெகிழ்ந்தார்எனில், வேலையிழந்தவர் உணர்வால் நன்றியை வெளிப்படுத்தினால், அதே பெயருள்ள எவரும் இவருக்கு நன்றியுள்ளவராக இருப்பார்கள்.
- எந்த மனிதரால், எந்த டாக்டரால், ஒருவர் உயிர்பிழைத்தாரோ, அவர் பெயர் உள்ளவருக்கு மறந்தும் எதிராகச் செயல்படமுடியாத உடல் நன்றியை உணர்வது.
- எவர் நம்மீது பிரியம்கொண்டாரோ, அவர் சம்பந்தப்பட்ட அத்தனை நிகழ்ச்சிகளும் - நாம் மறந்துபோனாலும் - நமக்கு மீண்டும் வரும் நேரம் மனம் மலரும், உணர்வு நெகிழும், உடல் புல்லரிக்கும். அது நன்றியறிதலுக்குரிய குணம்.
- எந்தப் பெயர், உத்தியோகம், குணம், உறவுள்ளவர் நம்மிடம் பிரியமாக இருந்தாரோ, அதே சூழ்நிலை மீண்டும் வரும்பொழுது, அது நமக்குக் கூடிவருவது, நாம் அவருக்கு நன்றியுணர்வோடு இருப்பதைக்காட்டும்.

✡ மனிதர்கள், செயல்கள், நிகழ்ச்சிகள், தேதி, நம்பர், பெயர், குணம், நினைவு, ஆதரவு, அன்புபோன்ற அனைத்திற்கும் ஜீவன் உண்டு. மனிதரில்லாவிட்டால், அவர் பிறந்த தேதி, அல்லது அவருடன் நாம் தொடர்புகொண்ட நிகழ்ச்சிகள் நமக்கு இராசியாக நடப்பது பொதுவாக நன்றியின் குறிப்பான குணம்.

மனத்தில் பலனில்லைஎனில், வெளியில் பலன் வருகிறது,
எல்லைவரை வருவது கடினம், கடப்பது மேலும் கடினம்.
எரிச்சல்படக்கூடாதுஎன்ற எண்ணம் சமர்ப்பணமாயிற்று:

✡ புரியாமல் மனப்பாடம் செய்பவன் அதிக மார்க் வாங்குவதுண்டு.

சட்டம் தெரியாத வக்கீல் சாமர்த்தியமாகக் கேஸை ஜெயிப்பதுண்டு.

*விஷயமில்லாவிட்டாலும், அனுபவம், ஆர்வம், கவனம், சாமர்த்தியம் ஜெயிக்கும்.*

✡ *தாயாருக்கு வரவேண்டிய பலன் உள்ளே. அது வாராதபொழுதும் வெளியில் பெரும்பலன் வருவது அன்னைசக்திக்குரிய விசேஷம்.*

✡ கம்பவுண்டர் டாக்டரைவிடப் பிரபலமாகி அதிகமாகச் சம்பாதித்தாலும், டாக்டர்பட்டம் பெறாமல் டாக்டராக முடியாது.

வக்கீல் குமாஸ்தாவை வக்கீல் ஆலோசனை கேட்கும்அளவுக்குத் திறமையிருந்தாலும் பட்டம் பெறாமல் வக்கீலாக முடியாது.

ஊரில் நாட்டாண்மைக்காரனுக்கு MLA, MPயைவிட செல்வாக்கு இருந்தால், அவரால் MLAஆகவோ, MPஆகவோ சில சமயங்களில் முடிவதில்லை. நாட்டாண்மைக்காரனுடைய செல்வாக்கு கிராமத்து அந்தஸ்து. அதற்கு அரசியலில் பலன் எதிர்பார்க்க முடியாது.

✡ ஒவ்வொரு வகுப்பும் இரண்டு வருஷம் படித்தவன் MA பாஸ் செய்த பொழுது, "இதுதான் நான் முதல்முறை பரீட்சை எழுதிப் பாஸ் செய்தது. என்னை 7ஆம் வகுப்பில் இன்று உட்காரவைத்தாலும், முதல் மார்க் கெட்டிக்காரப்பையனுக்குப் போகும். எனக்கு வாராது" என்றான். முதல்மார்க் வர புத்தி வேண்டும். எவ்வளவோ பேர் மந்திரியானாலும், முதல்மந்திரி பதவி அனைவருக்குமில்லை. அவை வாழ்வில் எல்லைக்கோடுகள். கடப்பது கடினம்.



✡ அன்பருக்கு எல்லாப் பிரார்த்தனைகளும் பலிக்கலாம். அன்னை எழுதியவை அனைத்தும் தெரியலாம். வாழ்வு பலமடங்கு உயர்ந்து இருக்கலாம். 'எனக்கு என்னைவிட அன்னை முக்கியம்'என்ற இடத்திற்கு வருவதோ, அதற்குரிய மனமாற்றத்தைப் பெறுவதோ, சமர்ப்பணம் பலித்து, சரணாகதியாவதோ எளிதன்று. ஆத்மா மலர்ந்து அன்னையை நாடினால் அவை கிட்டும்.

✡ *எரிச்சல்படாமலிருக்கலாம். எரிச்சலை அடக்கிக்கொள்ளலாம். எரிச்சல் சமர்ப்பணமாவது பெரியது.*

✡ சமர்ப்பணம் எந்த விஷயத்தில் பலித்தாலும், அவர் அன்பரில் சிறந்தவர்.

✡ *சரணாகதியை ஆத்மா ஆர்வமாக நாடினால், மனத்தில் சமர்ப்பணம் பலிக்கும்.*

✡ வாழ்வை அன்னைமூலம் அணுகுவது சாதகர் நிலை. வாழ்வை அன்னைமூலம் செவ்வனே நடத்துவது அன்பர் வழி.

✡ *அன்பராக ஆகலாம்; சாதகராவது கடினம். அன்னையின் குழந்தையாக ஆத்மா ஆர்வம்கொள்வது அகிலஉலகத்திற்கும் அதிர்ஷ்டம்.*

✡ எரிச்சல், கேலி சமர்ப்பணமாவதும், நல்லெண்ணம் சமர்ப்பணமாவதும் சமர்ப்பணத்தைப்பொருத்து ஒன்றேயாகும்.

*"எங்கள் குடும்பம்"* புத்தகம் பக்கம் 57இல் உள்ள 7 விஷயங்கள்:

❀ கேஸ் தயாராக வந்தது.

❀ போன் உடனே ரிப்பேரானது.

❀ டி.வி. தகராறு செய்யாதது.

❀ சிறியவன் எதையும் தொலைக்காதது.

❀ கரண்ட் நிற்காதது.

❀ மாத்திரை தேடாதது.

❀ நல்ல செய்திகள் வருவது.

✡ சரிவர சாப்பாடில்லாதவர்க்குத் தலைவலி, வயிற்றுவலி, கழுத்துக் குடைச்சல், இடறிவிழுவது, மயக்கம் வருவது, முகம் இருண்டு போவது ஆகியவை சகஜம். ஒவ்வொன்றிற்கும் உரிய மருந்துண்டு. அடிப்படையில் நல்ல சாப்பாடில்லாததால், இவை வருகின்றன. அவருக்கு நல்ல சாப்பாடு வேளைக்குத் தவறாமல் கொடுத்தால், ஒரு மாதத்திற்குள் முகம் இருள் நீங்கி தெளியும். மயக்கம் இனி வாராது. தலைவலி, வயிற்றுவலி, கழுத்துக்குடைச்சல் பெரும்பாலும் குறையும். இனி இடறிவிழுவது இல்லை. வியாதிஎன்றிருந்தால் மருந்து சாப்பிடுவது அவசியம், நல்லது. நல்ல சாப்பாடு, பெரும்பாலும் வியாதியுட்பட, குணப்படுத்தும்என்பதுபோல் அன்னை நினைவு ஆத்மாவுக்கு போஷாக்குத் தரும்.

❀ பொருள்கள் வீட்டினுள் வரவேண்டுமானால் அதற்கு energy சக்தி தேவை. காய்கறி வாங்கப் பணம் தேவைஎன்பதுபோல், energy இல்லாமல் ஒரு பொருள் உள்ளே வரமுடியாது. இருந்த கேஸை சரிவரப் பயன்படுத்தினால் கேஸ் தீரும்பொழுது தயாராக புது சிலிண்டர் வரும். ஆபீஸுக்கு லீவு போடாமல் ஒழுங்காக வேலை செய்தால் சம்பளம் தடையின்றி வரும். சம்பளம் முதலாளி கொடுப்பதன்று, நம் வேலை பெறுவது சம்பளம். அதில் குறையிருந்தாலும், சூழல் மிகையாக இருந்தால் காஸ் நம்மைத் தேடிவரும்.

❀ போன்என்பது நம் நாட்டிற்கும், பொதுவாக நம்மைப்போன்றவர் வீட்டிற்கும் உரியதன்று. வேலை அதிக அளவில் நடக்கும் பொழுது, நேரடியாகப் போக நேரம் ஆவதைத் தடுக்க ஏற்பட்டது போன். அந்த நிலை நம் நாட்டில் 1960, 1970வரையில்லை. அதனால் போன் பரவவில்லை. தற்சமயம் போன் பெரும்பாலோர் சௌகரியத்திற்கும், அந்தஸ்திற்கும் வைத்திருக்கிறார்கள். வேலைக்காகப் போன் வைப்பது ஆபீஸ்களில்தான். வேலை இல்லாமல் போனில் பேசினால், நெடுநேரம் பேசினால், போனுக்குரிய முறையை நாம் புறக்கணிக்கிறோம். புறக்கணித்தால் ரிப்பேராகும். ரிப்பேரானால் சுலபத்தில் மீண்டும் வேலை செய்யாது.



❀ டி.வி.க்குரிய முறையும் அதேபோன்றது.

❀ பையன் தொலைக்கிறான்எனில், அவனுக்குப் பொருள்களை அனுபவிக்கும் உரிமை, திறமையில்லைஎனப் பொருள்.

❀ கரண்ட் மிகவும் சூட்சுமமானது. டி.வி., போன், மாத்திரை, பொருள்களைவிட சூட்சுமமானது. மனத்தில் ஒரு சரியில்லாத எண்ணம் தோன்றினால் உடனே கரண்ட் நின்றுவிடும்.

❀ நல்லெண்ணம், நல்லவேலை, நல்லதைப்பற்றிப் பேசுவது, நல்ல செய்தியைக் கொண்டுவரும். சாதாரணக்குடும்பங்களில் நல்ல செய்தி எளிதில் வாராது.

❀ அன்னைச் சூழல் இக்குறைகளைமீறிச் செயல்படும். குறைகள் இல்லாவிட்டால் சூழல் ஜீவியமாக மாறும்.

தானே கேட்கக்கூடாதுஎனத் தாயார் முடிவு செய்தபொழுது பெரியவனும், கணவரும், பார்ட்னர் விஷயங்களைப் பேசுவதைத் தவிர்த்தனர்.

காதரீனுடைய அனுபவம்:

✡ *நாமே கேட்கக்கூடாது. தானே விஷயம் நம்மைத் தேடி வரவேண்டும் என்பது காரியம் முடிவதற்கு மிகச்சிறந்த உபாயம் (Silent will).*

✡ இப்பகுதியில் காரியம் எப்படி முடிந்ததுஎன நாம் ஆராய்ந்தாலும், இங்கு நமது குறிக்கோள் காரியத்தை முடிப்பது அன்று. என்ன நடந்தது, எப்படி நடந்தது (process)என அறிவதாகும்.

✡ Processஎன்பது விஞ்ஞானத்திற்கு அடிப்படை. மரம் எப்படி வளர்கிறதுஎன விஞ்ஞானம் அறிவதால், மரத்தை நாம் நம் இஷ்டப்படி வளர்க்க முடிகிறது. வியாதிஎன்பது என்ன, எப்படி ஏற்படுகிறதுஎனத் தெரிவதால், வியாதியைக் குணப்படுத்த முடிகிறது.

✡ பணத்திற்கு உலகில் முதலிடம், பெரிய இடம் அளிக்கிறோம். பணம் எப்படி உற்பத்தியாகிறதுஎன்று தெரிந்தால், அவர் பணத்தை உற்பத்தி செய்யலாம். அது விஞ்ஞானத்திற்குரியது. அதை process என்கிறோம்.

✡ *Processஎன்பதைக் கடந்தது essence மூலம். ஒரு ரிஷிக்கு எலியும், குழந்தையும் பிரம்மத்தாலானவர்எனத் தெரிந்தால், அவரால் எலியைக் குழந்தையாகவும், குழந்தையை எலியாகவும் மாற்றமுடியும்.*

✡ நம்மளவில் ஓர் உதாரணம் கூறலாம். வீடு எப்படிக் கட்டலாம்எனத் தெரிந்தால் வீடு கட்டலாம். நகை எப்படிச் செய்வதுஎனத் தெரிந்தால் நகை செய்யலாம். இங்கு வீடு, நகையிரண்டிற்கும் மூலம் பணம். நம்மிடம் வீடிருந்தால் பணத்தின்மூலம் அதை நகையாக்கலாம். நகையை விற்று வீடு கட்டலாம்.

✡ *Processஐ அறிவது விஞ்ஞானம். மூலத்தை அறிவது ஆன்மீகம்.*

✡ நாம் கேட்காவிட்டால், நாம் வெளியிட மறுக்கும் எண்ணத்தை அடுத்தவர் வெளியிடுவது silent will. ஏன் அதை நமக்குரியவர் வெளியிடவேண்டும்? மூன்றாம் நபர் செய்யக்கூடாதா? ஏன் அது நமக்குச் சாதகமாக இருக்கவேண்டும்?என்பவை எண்ணம், அதன் தன்மை, திறன், போக்கு, நோக்கம் ஆகியவற்றைப்பொருத்தது. நாம் வெளியிடாத எண்ணத்திற்கு வலிமையுண்டு. வலிமையிருப்பதால், அந்த வலிமை அடுத்தவர் எண்ணத்தைத் தன்னை நோக்கி இழுக்கிறது. தன்னை நோக்கி இழுக்கும் வலிமைக்கு ஆளுகை உண்டுஎன்பதால், எதிராளி சொல்வது நமக்குச் சாதகமாகயிருக்கும். தாயார் பெண்என்பதால் அவர் வலிமை பெண் அம்சத்தால் குறைந்து



போகும். அதனால் பெரியவனும், கணவரும் பேசுவதை நிறுத்தி விட்டனர்.

✡ காதரீன் silent willயை மேற்கொண்டதால் நிலைமை அவருக்குச் சாதகமாக மாறி, அவரே டிஸ்மிஸ் செய்யவேண்டிய பெண், தானே வேலையைவிட்டுப் போகிறேன்என்றார். கம்பனியே அனுப்பினால் ஏராளமான பணம் தரவேண்டும். ஊழியரே, தாமே போக விருப்பப்பட்டால், பல சலுகைகள் இருக்கா. கொஞ்சம் பணம் கொடுத்தால்போதும். மானேஜ்மெண்ட்டில் silent willக்கு ஏராளமான சக்தியுண்டு; பெருங்காரியங்களைச் சாதிக்கும். அமெரிக்காவில் காதரீன் செய்தது ஓர் அதிசயம்.

ஜனாதிபதி வருகை;
கணவர் விளக்கம் கேட்கிறார்;
கணவருக்கும், பெரியவனுக்கும் பெரிய ஆபீசர்கள் கொடுத்த அழைப்பு:

✡ ஜனாதிபதி எல்லா ஊர்கட்கும் போகிறார். அதில் என்ன விசேஷம் என்று கேட்கலாம்.

✡ ஒரு விசேஷமில்லாமல் ஒரு காரியம் நடக்காதுஎன்பதால், ஆன்மீக சூட்சுமம் உள்ளவர்க்குமட்டும் என்ன விசேஷம்என்று தெரியும்.

✡ அவ்வருகை ஊரில் எவருக்கு என்ன அர்த்தம்என்று தெரிய வேண்டும். அனைவருக்கும் ஓர் அர்த்தமில்லாமலில்லை.

✡ இதுபோன்ற நிகழ்ச்சிகள் பிற்காலத்தில் தங்கள் சிறப்பை வெளியிடும்.

✡ ஒருவர் ஜனாதிபதியாகும் வாய்ப்பிலிருந்து, அனைவரும் சுபீட்சம் பெறும் வாய்ப்புவரை இதற்குண்டு. எவை பலிக்கும்என்பது பின்னால் தெரியும்.

✡ "நான் கல்லூரியில் படித்தபொழுது பிரதமர் அங்கு வந்தார். வேறொரு கல்லூரியில் படித்தபொழுது, அதே பிரதமர் அந்த ஊருக்கு வந்தார். அதன் அர்த்தம் என்னஎன்று தெரியவில்லை'' என்பவருக்குப் பிற்காலத்தில் பிரதமரை அவர்சார்பாக மற்றவர் சந்தித்தபொழுதும், பிரதமரே அவரைச் சந்தித்தபொழுதும் புரியும்.

✡ வாய்ப்புக்கு அகண்ட அர்த்தமுண்டு. அது செயல்படுவது ஆயிரம் விஷயங்களைப்பொருத்தது.

✡ பெரிய ஆபீசர்கள் ''நீங்கள் பம்பாய் வந்தால், என்னை வந்து பாருங்கள்''என்பது பெரியவனைப்பொருத்தவரை ஜனாதிபதியே அழைத்ததைப்போன்றது.

✡ ஜனாதிபதி வருவது நமக்கென்ன அர்த்தம்என்று கணவர் கேட்டதே அவருக்கு ஏதோ புரிகிறதுஎன்று தெரிகிறது.

✡ ஊர் அதிர்ஷ்டம் நமக்கு வருகிறதா? நம் அதிர்ஷ்டம் ஊருக்கு வருகிறதா?என்று கணவர் கேட்டது அவருக்கு அன்னை புரிய ஆரம்பிக்கிறதுஎனத் தெரிகிறது.

✡ ஜனாதிபதி வந்தால் அதற்கு ஊருக்குள்ள அதிர்ஷ்டம் முழுவதும் திரண்டு நமக்கு வருகிறதுஎன்றாவது, நம் அதிர்ஷ்டத்தை ஊர் பகிர்ந்துகொள்கிறதுஎன்றாவது அர்த்தம்.

✡ நமக்கு ஊர்மீது நல்லெண்ணமிருந்தாலும், ஊருக்கு நம்மீது நல்லெண்ணமிருந்தாலும் இவை நடக்கும்.

✡ ஜனாதிபதி வருகை சாதாரணமானதுஎன்றாலும், நாட்டின் அதிகாரம் முழுவதும் திரண்டு இந்த ஊரையும், ஊர்வாசிகளையும் நாடுகிறது என்பது ஆன்மீக அர்த்தம்.

✡ ஒருவர் உள்ள ஊருக்கு ஜனாதிபதி வந்தார். அடுத்த மாதம் அவர் வேறு ஓர் ஊருக்குப் போனார். அங்கும் ஜனாதிபதி வந்தார் என்பதை அவர் கவனிக்காவிட்டால், அருளைக் கவனிக்கவில்லை என்று பொருள்.



சிறிய கடைக்காரனை மந்திரி பெரிய மனிதனாக்கினார்;
குறுக்கே பேசுவதைத் தடுக்க அன்னை வேறொருவரை அனுப்புகிறார்;
பெரியவனிடம் பேசாதே, அன்னையிடம் கூறு:

✡ அலமாரி செய்து விற்றவன் நொந்துபோனபின் நண்பனை உதவி கேட்டான்.

✡ நண்பன் "பேசாமல் சமாதிக்குப்போய் தினமும் அரைமணி உட்கார்" என்றான்.

✡ நண்பன் அதைச் செய்தான். பணம் வந்தது.

✡ வட்டிக்குக் கொடுத்து ஏராளமாகச் சம்பாதித்தான்.

✡ அரசியல் கட்சியின் கவனம் இவன் பக்கம் திரும்பியது.

✡ கமிட்டி மெம்பரானான்.

✡ மந்திரி கவனித்தார்.

✡ மந்திரிக்கு அந்தரங்க நண்பனானான்.

✡ அனைவரையும் கொட்ட ஆரம்பித்தான்.

✡ அத்தனையும் போய்விட்டது.

✡ இது நடக்காதவரில்லை.

✡ அப்படிப் போனபின் சமாதிக்கு வருமுன் இருந்ததைப்போல் இரு மடங்குக்கும்மேலாக இருந்தது.

✡ அதையும் வீராப்பைத் தொடர்ந்து அழிப்பவருண்டு.

✡ குறுக்கே பேசுவது நாகரீகமில்லை; தன்னடக்கம் வேண்டும்.

✡ அன்பனுக்கு அவ்வடக்கமில்லாவிட்டால், பேசக்கூடாதுஎன அவன் முயன்றால், அவன் பேசுமுன் அன்னை அங்கு வேறொருவரை அனுப்பிப் பேச்சைத் தடுக்கிறார்.

✡ பெரியவனால் கம்பனி கெட்டுப்போகும்என்றால் அப்பா, அம்மா கண்டிக்கக்கூடாதா?

✡ கண்டித்தால் தன்னால் முடியாத காரியத்தைப் பெரியவன் எப்படிச் செய்வான்?

✡ அவனிடம் சொன்னால் அவனை நம்புவதாக அர்த்தம். அவனிடம் சொல்வதற்குப்பதிலாக அன்னையிடம் சொன்னால் அவன் செய்யாததை அன்னை நிறைவேற்றுவார்.

✡ எதையும் யாரிடமும் சொல்வதற்குப்பதிலாக, அன்னையிடம்மட்டும் சொல்லக் கற்றுக்கொள்வது நல்லது. ''சரி, நான் அன்னையிடம் சொல்கிறேன்''எனவும் எவரிடமும் சொல்லாமலிருப்பது நன்று.

- ❀ மனத்தில் அது ஓர் எண்ணமாக இல்லாமல் செயலாய் இயல்பாய் இருப்பது சமர்ப்பணத்தில் பாதி.
- ❀ சமர்ப்பணம் அதையும்விடப் பெரியது.
- ❀ சமர்ப்பணம், சரணாகதியில் முடியும்.
- ❀ அன்னையிடம் சொல்ல ஆரம்பித்தால், அது சரணாகதிக்குக் கொண்டுபோகும்.

**ஆசை, அதிர்ஷ்டம், அருள், பேரருள்:**

✡ நாம் விரும்புவது ஆசை.

✡ ஆசை அபரிமிதமாகப் பூர்த்தியாவது அதிர்ஷ்டம்.

✡ *நாம் நினைக்காதது, நினைக்கமுடியாதது நடப்பது அருள்.*

✡ *நம்மை அறியாமல் வரும் அருள் நம் முயற்சியின்றி பூர்த்தியாவது பேரருள்.*

✡ *அருளின் கருவி சமர்ப்பணம், பேரருளின் கருவி சரணாகதி.*

✡ உயிருக்கு ஆசை; உடலுக்குத் தேவை.

✡ ஆசை எழுவது தெரியும். தேவை எழுவது தெரியாது.

✡ தெரியாமல் எழுவதைத் தெரிந்துகொள்வது power சக்தி.



✡ தெரிந்துகொள்வது விழிப்பு.

✡ தேவை எழுவதற்கு முன்னுள்ள விழிப்பு, தெய்வத்தின் விழிப்பு psychic opening.

✡ எண்ணம் எழுவது வெளியிட்டபின்தான் தெரியும்.

✡ எண்ணம் எழும்பொழுது தெரிவது மனத்தின் விழிப்பு.

✡ மனத்தில் எண்ணம் உணர்வாகவும், (physical sensation) உடலுணர்வாகவும் எழும்பொழுது தெரிவது மனத்தில் சைத்தியப் புருஷனின் விழிப்பு. அது நன்றியுணர்வு.

✡ உயிரில் எண்ணமும், உணர்வும், உடலுணர்வாக எழும்பொழுது தெரிவது vital psychic சைத்தியப்புருஷன் உயிரில் உதிப்பது. நன்றி உணர்வு செறிந்து உடலையடைவது.

✡ உடலில் எண்ணமும், உணர்வும், உடலுணர்வும் அதன் அசைவாக எழுவது தெரிவது physical psychic உடலுக்குரிய சைத்தியப் புருஷன். உடலில் புல்லரிப்பாக எழும் நன்றி.

✡ மனம், உயிர், உடலில், எண்ணம், உணர்வு, உடலுணர்வு 9 நிலைகளில் (*''எங்கள் குடும்பம்''* புத்தகம் பக்கம் 407) உற்பத்தியாகின்றன.

✡ மனத்தில் உணர்வும், உடலுணர்வும் உற்பத்தியாவதைப்போல், உணர்வில் எண்ணமும், உடலுணர்வும் உற்பத்தியாகும். உடலில் எண்ணமும், உணர்வும் உற்பத்தியாகும். இவ்ஒன்பதும் எத்தனை ஆயிரம் வகையாகவும் கலந்துவரும்.

✡ தேவை ஆசையாவதும், ஆசை தேவையாவதும் உண்டு.

✡ ஆசை அதிர்ஷ்டமாகவோ, அருளாகவோ, பேரருளாகவோ வரும். எப்படி வந்தாலும் அது ஆசையே.

✡ பேரருள், அருள், அதிர்ஷ்டம் ஆகியவை ஆசை, தேவையாகவும் வரும்.

- சிறியது பெரியதாக வரும்.
- பெரியது சிறியதாக வரும்.
- அவற்றின் ஆரம்பம், ஆரம்பத்திற்குரிய இடம்.
- ஆரம்பத்தில் விழிப்பு வளரும் ஆன்மாவின் விழிப்பு.
- அவ்விழிப்பை மனத்திலோ, உயிரிலோ, உடலிலோ காணலாம்.
- விழிப்பு செயல்படுவது சமர்ப்பணம்.
- விழிப்பு வாழ்வாவது சரணாகதி.
- ஆசை பேருளானாலும் ஆசையின் சுவடிருக்கும்.
- பேரருள் ஆசையானாலும் பேரருளின் சுவடிருக்கும்.
- எது உள்ளது, எதன் சுவடு தெரிகிறது என்பதே அறிவு.
- அறிவு முதிர்வது ஞானம்.
- ஞானம் உறுதிபெறுவது செயல்.
- செயல் பூரணம்பெறுவது சித்தி.
- பூரணச்சித்தி பூரணயோகசித்தி.

**100 கோடிக்குமேல் சம்பாதித்தவர் தம் உரிமையைக் கேட்காதவர்:**

- உடமையை விட்டுக்கொடுக்க முடியாது. கோர்ட், கேஸ், அடிதடி, சண்டை அவ்வளவும் உடமைக்காக நடப்பவை.
- உடமையை விட்டுக்கொடுப்பவனாலும், உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது.
- உரிமையை விட்டுக்கொடுப்பது சரித்திரத்திலில்லை, புராணத்தில் காணலாம்.
- *பண்பு உருவாகப் பொறுப்பு உதவும்.*



- பிறர் பொறுப்பை ஏற்றால் நம் பொருளைக் - உடமையை - கொடுக்க வேண்டும்.
- அது குடும்பத்திற்குரிய பண்பு.
- குடும்பத்தைக்கடந்து உடமையை விட்டுக்கொடுப்பதுஎன்பது இல்லை.
- இப்பண்பு எப்படி உருவாகிறது?
- ஏராளமான தான்யம் - நெல் - பயிராகும்பொழுது, யார் சாப்பிடுகிறார்கள்என்பதைக் கவனிக்க முடிவதில்லை. அதனால் பலரும் நம் பொருளை அனுபவிப்பது நமக்குச் சந்தோஷம் தரும்.
- நெடுநாளாக அனைவரும் நம் பொருளை அனுபவித்தால், நமக்கு அளவுகடந்த செல்வாக்கு, அதிகாரம் வரும்.
- அதிகாரம் குறைந்த அளவிலிருக்கும்பொழுது, அதைச் செலுத்த ஆசை எழும்.
- உபரியாக அதிகாரம் பொங்கிவழிந்தால், அனைவரும் அடிபணிந்து அவரைச் சூழ்ந்திருப்பர்.
- அந்த நேரம் நம் செல்வாக்கைப் புறக்கணிப்பவர் - பிரியமானவர் - மீது மனம் பிரியப்படும்.
- அதிகாரத்தைச் செலுத்துவதைவிட மனம் அதிகாரத்தை இழக்க - உரிமையை வலிய இழக்க - விழையும். அதற்குரிய சந்தர்ப்பம் எளிதில் கிடைக்காது.
- அந்த அளவுகடந்த செல்வத்தையும், செல்வாக்கையும் பல தலைமுறைகளில் அனுபவித்தவருக்கு உரிமையைக் கேட்க முடியாது.
- தன் உரிமையைக் கேட்க முடியாதவன் பிறர் உரிமையை அறிபவன்.
- *பிறர் உரிமைஎன்பது, நம்மைப்போல் பிறரும் பிரம்மம்என்பது.*
- அது பிரம்மஞானம்.
- பிரம்மஞானம் எந்த ரூபத்திலிருந்தாலும் செல்வத்திற்குக் குறைவு இல்லை.

✡ 100 கோடிக்குமேல் சம்பாதிக்க உரிமையைக் கேட்காத குணம் உதவும்என்பது உரிமையுள்ள பெருஞ்செல்வம் மறைந்துள்ளதுஎனப் பொருள்.

✡ உரிமை செல்வம்; கேட்காவிட்டால், பெருஞ்செல்வம்.

தொழிலதிபரின் மனை, கண்பார்வை, எனக்கு மதர் வேண்டாம்:

✡ தம் கம்பனி மனையில் வண்ணான் துணி காயப்போடுவது வழக்கமானதால், எல்லா வண்ணான்களும் அம்மனையை தங்களுக்கே சொந்தம், அங்கு கம்பனி கட்டிடம் கட்டக்கூடாது என்பதை, அரசுசார்பாக வந்த அதிகாரி ஆதரிப்பதால், முதலாளி நிர்கதியாய் நின்ற நேரம், பிரார்த்தனையால் அதிகாரியின் ஸ்தாபனச் சேர்மன் சாதகமாக ஆர்டர் போட்டு மனை காப்பாற்றப்பட்டது.

✡ கண்ணின் உள்ளே இரத்தக்குழாய் வெடித்துப் பார்வை குறையும் பொழுது, பத்ரிநாத், "இது உங்களுக்கு அடுத்த கண்ணில் பல ஆண்டுகட்குமுன் வந்தபொழுது டெல்லிக்குப்போய் சிகிச்சை செய்துகொண்டீர்கள். இப்பொழுது அந்த மெஷின் என்னிடமே இருக்கிறது. ஆனால், இரண்டாம் முறை இரத்தம் வருவதாலும், வெடிப்பு கண்ணின் மையத்திற்கு அருகேயிருப்பதாலும், சிகிச்சை பலன் தாராது; தொந்தரவு தரும்"என்றபின் பிரார்த்தனை கண் பார்வையை மீட்டது.

✡ அன்னையை அறிந்தபிறகு 3 ஆண்டுகளில் இவர் தொழில் 5 மடங்கு பெருகியது. 17 வருடங்களாகக் கையிலிருந்த வலி மறைந்தது.

✡ எத்தனை முறை தெய்வம் செயல்படுவதைக் கண்டாலும், பலனாக அனுபவித்தாலும், நம்பிக்கையில்லாத மனத்தில் நம்பிக்கை பிறக்காது.

✡ மனிதனுக்கு முக்கியமானது,



❀ தான் மாறக்கூடாது.

❀ தம்மை எவரும் மாறும்படிக் கூறக்கூடாது.

❀ தாம் மாறும் சந்தர்ப்பம் வரக்கூடாது.

❀ மாறுவதானால் தாமே விரும்பி மாறவேண்டும்.

❀ தம்முடைய நிலையில் வரும் முன்னேற்றமே முன்னேற்றம்.

❀ தன் குறைகளை நிறைவாகப் பாராட்டுபவனே மனிதன், நண்பன், நம்பிக்கைக்குரியவன்; மற்றவர்கள் அன்னியர், எதிரி, தீய சக்திகள், அழிக்கப்படவேண்டியவர்கள்.

❀ தம் இஷ்டப்படி நடப்பது சந்தோஷம்; அதுவே நியாயம், தர்மம், நேர்மை, ஒழுங்கு, உயர்வு, கட்டுப்பாடு.

❀ மனிதன் மாறவேண்டும்என்பது கொடுமை, மன்னிக்கமுடியாத செயல்.

❀ அதே மாற்றம் தனக்கு ஆதாயம்என அவன் நினைத்துவிட்டால் அம்மாற்றத்தை அவனைப்போல் ஆர்வமாக எவரும் நாட மாட்டார்கள்.

இக்குடும்பத்தை இந்த நோக்கோடு கவனித்தால், அனைவரும் இந்த விதிக்கு விலக்கில்லாமல் செயல்படுவதைக் காணலாம்.

அடக்கம், பண்பு, எல்லாம் சத்தியத்தில் அடங்கும்;
நாம் சொல்லும் மெய் எல்லாம் பொய்;
எஸ்டேட் வாங்கியது, விற்றது;
பணத்தைவிட மனைவியின் அபிப்பிராயம் முக்கியம்:

✡ சத்தின் புறஉருவம் சத்தியம்.

✡ சத்தியம் எல்லாச் செயல்களிலும் ஓரளவு வெளிப்படும். அவற்றுள் அடக்கம், பண்பு ஆகியவை அடக்கம்.

✡ நமக்கு எதைச் சொல்லக்கூடாது, எதைச் சொல்லவேண்டும்என்ற பயிற்சியுண்டு. அது பொய், மெய்என்ற பாகுபாட்டில் ஏற்பட்டதன்று; அசௌகரியம், சௌகரியம்என்று பிரிக்கப்பட்டது. நமக்கு சௌகரியமானது பொய்.

✡ 'என் மனைவி என்னைப் பணக்காரன்'எனக் கூறவேண்டும்என்பது இலட்சியம். 'நான் பணக்காரனாகவேண்டும்'என்பதுகூட முக்கியம் இல்லை.

✡ மனிதன் பணத்தையோ, மனைவியையோ நாடவில்லை; தன்னையே நாடுகிறான்.

✡ இக்கதையில் கணவர் அதை மிகத்தெளிவுபடுத்துகிறார்.

✡ கவனமாகப்பார்த்தால், 3 பிள்ளைகளும் அப்படியேயிருக்கிறார்கள்.

✡ ஒருவர் வீட்டில் மெய் சொல்வது மற்றவர்களைப் பாதிக்கும்எனில் அனைவரும் அவரைச் சின்னாபின்னாப்படுத்திவிடுவார்கள்.

✡ எஸ்டேட் காலி எஸ்டேட்டாக இருக்கலாம். 'எஸ்டேட் முதலாளி' என்பது மனம் நிறைந்த சொல்.

✡ அந்தச் சொல் மனைவிக்கு இனிக்கும்என்று எதிர்பார்த்தார்.

✡ மனைவி படிப்பறிவில்லாதவள்என்பதால், எஸ்டேட் விபரம் புரியாது.

✡ எஸ்டேட்டில் செலவுக்குள்ள பணத்தை அவளிடம் கொடுத்து விட்டால், அவள் மனம் நிறையும்எனக் கற்பனை செய்தார்.

✡ கற்பனை பல ஆண்டுகள் பலித்தது; கடைசிவரைப் பலிக்கவில்லை.

✡ விவரம் தெரிந்தவுடன் மனைவி வெறும் பெண்ணாகப் பேசினாள்.

✡ நாம் சொல்லும் பொய்க்கு ஆயுள் உண்டு.

✡ ஆயுள் முடிந்தபின் பொய்யை பொய்என உலகம் அறியும்.

✡ பணம் முக்கியமா, மனைவி முக்கியமாஎன்பது பிரச்சினையில்லை.

✡ இரண்டையும்விட சத்தியம் முக்கியம்.

✡ இந்த வீட்டில் எவருக்கும் சத்தியம் தேவைப்படவில்லை.



மெய் காப்பாற்றும், பொய் மாட்டிவிடும் -
தம்பியைத் துரத்துபவரிடம் காட்டிக்கொடுப்பாயா?
இன்டர்வியூவில் சர்ட்டிபிகேட் பொய்எனக் கூறியது;
கணவருக்கு மாமனார்மீது கோபம் - என்னைக் கிளறுகிறார் - பொறுத்துக்கொண்டேன்;
அப்பா பார்ட்னர் விஷயத்துடன் வந்தார் - பிரச்சினை வாய்ப்பானது:

✡ ஒரு நேரம் என்று வந்துவிட்டால் மெய்யை நினைத்தால் பயம் எழும். பொய் சுலபத்தில் காப்பாற்றும்எனத் தோன்றும். அது உண்மை இல்லை. மெய்மட்டுமே காப்பாற்றும். பொய் நிச்சயமாகச் சதிசெய்யும். தம்பியைக் கோபமாகத் துரத்துபவரிடம் மெய் சொல்கிறேன்எனக் காட்டிக்கொடுப்பாயா? பொய் சொன்னால், நம்பாமல் அவனைப் பிடித்துவிடுவார்கள். மெய்யை மனதில் ஏற்று, சொல்லமுடியாமல் தவித்தால், விஷயம் மாறும், தம்பியைக் காப்பாற்றலாம். இங்கும் தம்பியைக் காப்பாற்ற மெய்யை நாடுவதற்குப்பதிலாக, *மெய்யைச் சத்தியம்என நம்பினால் பூரணஆதரவுண்டு. அன்னை சத்தியம். அவரைமட்டும் அன்போடு நினைப்பது, நிகழ்ச்சியை நினைவிலிருந்து அகற்றும். ஆபத்து வந்துபோகாது. ஆபத்து அணுகாது.*

✡ தன்சார்பில் பெரியப்பா தாம் apprenticeஆக வேலை செய்ததாக வாங்கிவந்த சர்டிபிகேட் பொய்என மாணவன் கூறியபின்னும் அவனுக்கு B.E.இல் இடம் கொடுத்தார்கள். பையனின் மெய் அவனைக் காப்பாற்றியது.

✡ கணவர் விவரம் தெரியாமல் - தவறான அபிப்பிராயத்தால் - மாமனார் தமக்கு மரியாதை தரவில்லைஎன நினைத்துக்கொண்டு, கோபத்தை மனைவிமீது காட்டுகிறார். மனைவிக்கு உண்மை தெரியும். பெண்என்பதால் அவர் பேச்சு எடுபடாது. மனைவி நியாயப்படி கணவர்மீது கோபப்படவேண்டும். அப்படியிருக்கக் கணவன் அநியாயமாக மனைவிமீது கோபப்படுகிறார். மேலும்

**அவளைக் கிளறுகிறார். இது பொறுக்க முடியாதது; பொறுக்கக் கூடாதது.**

- ❀ **தவறு கணவர்மீது.**
- ❀ **அவர் அபிப்பிராயம் தவறு. நடந்த விஷயம் எனக்குத் தெரியும். அவருக்குத் தெரியாது.**
- ❀ **நான் கோபப்படவேண்டிய நேரம். அவர் என்மீது கோபப்படுகிறார்.**
- ❀ **என் கோபத்தைக் கிளறுகிறார். பொறுத்துக்கொண்டால் ஏன் பதில் சொல்லவில்லைஎன மிரட்டுகிறார். அதிகாரம், ஆண்மை, கொடுமை செய்கிறது.**
- ❀ **ஒரு கட்டம் தாங்கமுடியாத இடத்தில் இரண்டாம்கட்டம் எப்படிப் பொறுப்பது? அவர் மூன்றாம்கட்டம் தாண்டி, நாலாம் கட்டத்திலிருக்கும்பொழுது, நான் இனி விஷயத்தை உடைத்துப் பேச முடிவுசெய்தேன். அன்று அப்பா ஊரிலில்லை. அதன்பின் படித்தவையெல்லாம் *'தடை - சோதனை', 'Difficulties are opportunities', 'பிரச்சினை வாய்ப்பு', 'உள்ளே பார்', 'உள்ளே மட்டும் பார்'* என்று வந்ததால் சற்று மனம் மாறினேன். ஊரிலிருந்து வரும்பொழுது அப்பா, பார்ட்னர் விஷயத்துடன் வந்தார். *பிரச்சினை வாய்ப்பாயிற்று.***
- ❀ **இதுபோன்ற நேரங்களில் தாயாரே பொறுமையிழக்காவிட்டால் கணவர் பொறுமையிழப்பார். அந்த நேரம் பொறுமையை இழக்காமல் விஷயத்தை உடைத்தால் வேகம் எழும். அது அன்னைக்குரிய வேகம். விஷயம் தீரும்.**
- ❀ **மனைவி பெண்என்பதால் அவருக்குப் பணிந்துபோகும் சந்தர்ப்பம் வந்து பிரச்சினை வாய்ப்பாகிறது. ஆண்மை தவறு செய்தால், அதிகாரி கொடுமை செய்தால் அவர்கட்குத் தண்டனையில்லை. பலியானவருக்கு விடுதலை கிடைக்கும். ஜட்ஜ் தப்பு செய்தால் அப்பீலில் ஜெயிக்கலாம். ஜட்ஜ்க்குத் தண்டனை பெற்றுத்தர முடியாது.**

*தொடரும்.....*

❀❀❀



## ஸ்ரீ அரவிந்த சுடர்

கட்டுப்படாததை அடக்குவது; சக்தி (force) தன்னையறிவது; மேலிருந்து உள்ளே போவது; உள்மனம் விழிப்பது; பரமாத்மா முன்னிலையில் சமர்ப்பணம் செய்வது; பரந்த, ஆழ்ந்தகன்ற விழிப்பு; பூரண ஆத்மசமர்ப்பணம்; உடலின் சைத்தியப்புருஷன் செயல்படுதல்; அகந்தை அழிதல்; காலத்தைக்கடந்த பொறுமை; முரண்பாட்டில் உடன்பாட்டைக் காண்பது; நம் நித்தியத்தை அறிதல்; ஆன்மா ஜடத்தை ஆள்வது; சிருஷ்டியை அறிவது (process); சர்வம் பிரம்மம்என்பது; ஒன்று தவிர மற்றதில்லைஎன்பதுடன் இணைத்துப் புரிந்துகொள்வது; 'அது' தென்படுவது; அறிவு புலனிலிருந்து விடுபடுதல்; ஜகத்குரு ஆகியவை யோகத்தின் முதற்படிகளாகும்.

***யோகத்தின் முதற்படிகள்.***

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XIII. The Divine Maya

Page No.115
Para No.9

This power was known to the Vedic Seers.
They knew it as Maya.
To them it had a meaning.
It is a power of infinite consciousness.
It can comprehend.
It contains in itself.
It measures out.
Measuring out is to form.
Form is delimitation.
It gives a Name.
It shapes.
It does so from a vast Truth.
It is an illimitable Truth.
It is of infinite existence.
The truth of essential being is static.
The truth of active being is ordered.
It is Maya that changes the one into another.
It can be put in metaphysical language.



## 13. தெய்வீக மாயை

வேத ரிஷிகள் இதை அறிவார்.
அதை மாயை என்றனர்.
மாயையை அவர் விவரித்தனர்.
மாயை அனந்த ஜீவியத்தின் சக்தி.
அதற்கு விளங்கும்.
அது உலகைத் தன்னுட்கொண்டது.
அதனால் அளக்க முடியும்.
அளவு என்பது ரூபம்.
ரூபம் என்பது வரையறை.
அதற்கு நாமம் உண்டு.
அதனால் உருவகப்படுத்த முடியும்.
பரந்த சத்தியத்தின் பகுதியது.
அச்சத்தியம் வரையறையற்றது.
அது அனந்தமான சத்.
அடிப்படை ஜீவனின் சத்தியம் அசைவற்றது.
சலனமான ஜீவனின் சத்தியம் முறையானது.
இம்மாற்றத்தைச் செய்வது மாயை.
இதைத் தத்துவமாகக் கூறலாம்.

**All is all in the Supreme being.**
**There is no barrier of separative consciousness.**
**All is in each and each is in all in the phenomenal being.**
**It is for the play.**
**It is a play of existence with existence.**
**It is so with consciousness too.**
**Force also separates for the purpose of play.**
**Delight plays with delight.**
**The mental play conceals this whole.**
**It is an illusion.**
**Maya came to be known as illusion.**
**Maya persuades each he is in all.**
**It does not permit him to see all is in each.**
**It gives the illusion that he is in all as a separate being.**
**Truly he is inseparable.**
**He is one with all the rest of existence.**
**We have to emerge from this error.**
**Emerging out of it, we come into the supramental play.**
**There we see the truth of Maya.**
**There 'each' and 'all' co-exist.**
**There is an inseparable unity.**
**It is the unity of the one truth.**
**It is the multiple symbol of that truth.**
**The lower Maya is at present deluding.**
**It is mental Maya.**
**It has first to be embraced.**
**Then it must be overcome.**
**It is God's play with division and darkness.**
**It is play with limitation, desire and strife.**



**ஆதியில் எல்லாம் எல்லாவற்றிலுமுள்ளது.**
**பிரிக்கும் ஜீவியம் அங்கில்லை.**
**தோற்றத்தில் அனைத்தும் ஒன்றிலும், ஒன்றில் அனைத்தும் உள்ளன.**
**அதுவே லீலை.**
**சத் சத்துடன் விளையாடுகிறது.**
**ஜீவியமும் அப்படியே.**
**சக்தியும் பிரிந்து விளையாடுகிறது.**
**அனந்தமும் விளையாட்டில் கலந்துகொள்கிறது.**
**மனம் இம்முழுமையைக் காண்பதைத் தடுக்கிறது.**
**அது மாயை.**
**மாயை என்பது இல்லாததுஎன நாம் கொண்டோம்.**
**அனைத்தும் தன்னுள் இருப்பதாக மட்டும் மாயை கூறுகிறது.**
**அனைத்தும் அனைத்தினுள்ளிருப்பதைப் பார்க்க மறுக்கிறது.**
**எல்லாவற்றிலும் தான் தனித்திருப்பதாகத் தோன்றுகிறது.**
**உண்மையில் அவற்றைப் பிரிக்க முடியாது.**
**நாம் அனைத்துடனும் ஒன்றியவராவோம்.**
**இத்தவற்றிலிருந்து நாம் வெளிவரவேண்டும்.**
**வெளிவந்தால் சத்தியஜீவியம் உண்டு.**
**அங்கு மாயையின் உண்மை தெரியும்.**
**அங்கு நாமும், அனைத்தும் இணைந்துள்ளோம்.**
**அது பிரிக்கமுடியாத ஐக்கியம்.**
**அது சத்தியத்தின் ஐக்கியம்.**
**ஒன்று என்பது பலவாகத் தோன்றும் தோற்றம் அது.**
**உலகத்தில் மாயை கண்ணை மறைக்கிறது.**
**இது மனத்தின் மாயை.**
**இதை முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டும்.**
**ஏற்றபின் அதைக் கடக்கவேண்டும்.**
**பிரிவினையிலும், இருளிலும் இறைவன் லீலை அது.**
**ஆசை, சச்சரவு, அளவு, இந்த லீலைக்கு ஆதரவு.**

**It is a suffering in which He subjects Himself to the Force.**
**After all, the Force came out of Him.**
**By his obscure, He suffers Himself to be obscured.**
**There is the other Maya.**
**It is concealed by the mental play.**
**It has to be overpassed and embraced.**
**It is God's play.**
**It is His play with His infinite existence.**
**He plays with the splendours of knowledge.**
**He masters the glories of the Force.**
**He does so with the ecstasies of illimitable love.**
**Thus He emerges out of His Force.**
**He holds her now.**
**The Force went forth from Him at first for a purpose.**
**It is to illumine her by fulfilment.**

*Contd...*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதனுக்கோ, ஆன்மாவுக்கோ பரிணாம வளர்ச்சி தேவையில்லை. அதைத் துரிதப்படுத்தும் அவசியமும் இல்லை. இறைவனுக்கு அந்த அவசியம் ஏற்படலாம். தான் பெறும் ஆனந்தத்தின் நிலையை உயர்த்த இறைவன் நினைத்தால் ஆன்மீகப்பரிணாமத்தின்மூலம் ஒளிந்ததைக் காண முன்வந்து, அதைச் சாதிக்கலாம்.

***ஒளிந்ததைக் காண ஓடிவருவது பரிணாமம்.***



**இறைவன் தன் சக்திக்குத் தானே கட்டுப்பட்டு கஷ்டப்படுகிறான்.**
**சக்தி இறைவனுடையது.**
**இருளில் தான் உழலச் சம்மதிக்கிறான்.**
**வேறொரு மாயையுண்டு.**
**மனத்தால் அது மறைக்கப்படுகிறது.**
**அதை ஏற்று, கடக்கவேண்டும்.**
**அது இறைவனின் லீலை.**
**மனித வாழ்வில் இறைவனின் லீலை அது.**
**ஞான விகாசம் அவன் திடல்.**
**சக்தியின் பெருமை அவன் கருவி.**
**அளவற்ற அன்பின் பெருக்கு அவனது அரங்கம்.**
**தன் சக்தியிலிருந்து தான் வெளிவரும் பாங்கு அது.**
**தற்பொழுது சக்தி அவனுக்குட்பட்டது.**
**அக்காரணத்திற்காக சக்தி முதலில் அவனின்று எழுந்தது.**
**ஜோதியால் தன்னைப் பூரிக்க சக்தி கையாண்ட உபாயம் அது.**

*தொடரும்.....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

**ஆனந்தத்தை உடல் தலைகீழாக உணர்வது வலியாகும்.**

### ஸ்ரீ அரவிந்த சுடர்

அக்ஷயப்பாத்திரத்தில் அனந்தன் ஜடமாக வெளிப்படுகிறான். எதிரியின் பலத்தில் பாதி தனக்கு வேண்டும்என்று கேட்டவனுக்குக் கொடுக்கும் வரம் உணர்வில் அனந்தமாகும்.

***எல்லையற்ற பலம்.***

# இம்மாதச் செய்தி

## அர்த்தமற்ற ஆர்ப்பாட்டம் அகந்தையின் அழிச்சாட்ட ஆரம்பம்.



## அன்பர் கடிதம்

**ஓம் நமோ பகவதே**
**தெய்வீக அன்னையின் மலர்திருவடிக்குச் சமர்ப்பணம்**

ஸ்ரீ அன்னையின் அருளால் நலம்.

நான் கடலூர், ஜோதிநகரில் வசிக்கிறேன். எனக்கு 26.10.2002அன்று மஞ்சள்காமாலை வந்தது. அதற்காக டாக்டரிடம் சிகிச்சை எடுத்தேன்; குணம்ஆகவில்லை. நோய் அதிகமாகிக்கொண்டே வந்தது. பிறகு சென்னையில்இருந்து கடலூர் வரும் டாக்டரிடம் (Gastrospecialist) காட்டினேன். அவர் சில டெஸ்ட் எடுத்து பார்த்துவிட்டு, இது சாதாரண மஞ்சள்காமாலை இல்லை. இது auto immune hepatitisஎனக் கூறினார். Auto immune hepatitisஎன்றால் நம் உடலில் நோய் வாராமல் பாதுகாக்க வேண்டிய செல்களே நமக்கு எதிராக மாறுவது. இது மிகவும் rare caseஎனக் கூறினார். இதற்கு (steroid) ஸ்டிராய்டுதான் ஒரே மருந்துஎனக் கூறினார். ட்ரீட்மெண்ட்டுக்காக சென்னை வரச்சொன்னார். அங்கு, மேலும் பல டெஸ்ட் எடுத்து கன்பர்ம் செய்துவிட்டு steroid வாழ்நாள் முழுவதும் சாப்பிடவேண்டி இருக்கும்; நிறுத்தினால் இந்த நோய் மீண்டும் வர சான்ஸ் உள்ளதுஎனக் கூறினார். இந்த மருந்தால் நிறைய பக்கவிளைவுகள் வரும்எனச் சொன்னார். நோய் மிகவும் முற்றிவிட்டதால் உயிர் காக்கும் மருந்தாகச் (steroid) சாப்பிட ஆரம்பித்தேன். ஹாஸ்பிடலில் 20 நாட்கள் இருந்தேன். அப்போது ஒரு நாள் ஹாஸ்பிடலில் இருக்கும் டி.வி.யில் காலை 5.55க்கு ஸ்ரீ அன்னையின் தரிசனம் கிடைத்தது. உடனே என் கணவரிடம் ஸ்ரீ அன்னையின் படம் எனக்கு வேண்டும்எனக் கேட்டேன். அவரும் மாம்பலம் தியானமையம் போய் விசாரித்துவிட்டு, ஸ்ரீ அன்னையின் படம் கிடைக்காதுஎனக் கூறி, ஸ்ரீ அன்னையின் மலர்ப்பிரசாத

பாக்கெட்டும், ''அன்னையின் தரிசனம்'' புத்தகமும் கொடுத்ததாக என்னிடம் கொடுத்தார். பிறகு, ''எங்குஇருந்து வருகிறீர்கள்''எனக் கேட்டுவிட்டு, ''கடலூரில்இருந்து வருகிறோம்''எனச் சொன்னவுடன் கடலூர் ஜோதிநகரில் ஸ்ரீ அன்னையின் தியானமையம் செயல்படுகிறதுஎன அவர்கள் கூறியவுடன்தான் எங்களுக்கு கடலூர் ஜோதிநகரில் ஸ்ரீ அன்னையின் தியானமையம் இருப்பது தெரிய வந்தது. **அன்னையின் தரிசனம்** புத்தகத்தில் **"கர்மத்தின் ஆணிவேரை கரைக்கும் சக்தி ஸ்ரீ அன்னைக்குமட்டும்தான் உண்டு"**என எழுதி இருப்பதைப் பார்த்தபின்தான் எங்களுக்கு ஸ்ரீ அன்னையின்மேல் நம்பிக்கை வந்தது. ஸ்ரீ அன்னையின் மலர்ப்பிரசாதத்தைத் தலையணை அடியில் வைத்துத் தூங்கியதில் என் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. டெஸ்ட் எடுத்துப்பார்த்ததில் நோயின் தீவிரம் குறைந்துஇருப்பது தெரிந்தது. நான் ஹாஸ்பிடலில் இருக்கும்போது "இந்த மருந்தை (steroid) நான் அதிகநாள் சாப்பிடக்கூடாது, எனக்கு எந்தப் பக்கவிளைவும் வரக்கூடாது''என்று ஸ்ரீ அன்னையிடம் வேண்டிக்கொண்டேன். பின் டிஸ்சார்ஜ்ஆகி கடலூர் வந்தேன். அங்கு ஜோதிநகரில் ஸ்ரீ அன்னையின் தியானமையத்துக்கு நானும், என் கணவரும் சென்றோம். அங்குத் தியானமையப் பொறுப்பாளர் என் நிலைமையைக் கேட்டுவிட்டு, ஸ்ரீ அன்னையை ஏற்கும் முறைபற்றித் தெரிவித்தார். அதன்படியே செய்துவந்தோம். பொறுப்பாளர், மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டிக்கு அழைத்துச்சென்று, அங்குள்ள அன்பர்கள்மூலம் ஸ்ரீ அன்னையை எப்படி வணங்கவேண்டும், என்னென்ன மலர்கள் வைத்து வணங்க வேண்டும்என்றும், தினமும் **'சாவித்ரி'** புத்தகம் (310 - 348 பக்கம்) படிப்பது ஆகியவற்றைத் தெரிந்துகொள்ள உதவினார். ஸ்ரீ அன்னையின் தியானமையத்தில் தினமும் நடைபெறும் தியானக் கூடலின்போது *'சாவித்ரி'* புத்தகத்தைப் படிக்கும் வாய்ப்பை அன்னை ஏற்படுத்திக்கொடுத்தார்கள். எந்த நேரமும் ஸ்ரீ அன்னையின் நினைவால் மருந்து சாப்பிட்டுகொண்டு, வீட்டில் அனைத்து வேலைகளையும் செய்து கொண்டுஇருந்தேன். வாரா, வாரம் தியானமையத்தைச் சுத்தம் செய்யும்



பாக்கியத்தையும் அன்னை எனக்குக் கொடுத்தார்கள். ஸ்ரீ அன்னையிடம் எந்த நேரமும் ''எனக்கு மருந்து வேண்டாம், எந்தப் பக்கவிளைவும் வரவேண்டாம்''என வேண்டிக்கொண்டேன். *சாவித்ரி* புத்தகத்தில் (310 - 348 பக்கம்) தினமும் ஒரு பக்கம் வீட்டில் எழுதினேன். ஸ்ரீ அன்னையை மட்டும் வீட்டில் வணங்கிவருகிறோம். தினமும் மலர்கள் வைத்து எந்த நேரமும் ஸ்ரீ அன்னையின் நினைவால் இருப்பதால் ஸ்ரீ அன்னை என்னை எல்லா வேலைகளையும் நன்றாகச் செய்யவைக்கிறார். எந்தப் பக்கவிளைவும் இல்லை. 22 மாதங்கள் மருந்து சாப்பிட்டுவிட்டு (7.11.2004) கடலூரில், ஸ்ரீ அன்னையின் 10ஆம் ஆண்டுவிழாஅன்று டெஸ்டை பார்த்த டாக்டர் மருந்து வேண்டாம்என நிறுத்திவிட்டார். எங்களுக்கு என்ன சொல்வதுஎன்றே தெரியவில்லை. ஸ்ரீ அன்னைக்கு நன்றி கூறினோம். பிறகு ஆண்டுவிழாவில் கலந்துகொண்டோம். வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிடவேண்டும்என்ற என் நிலையை மாற்றிய ஸ்ரீ அன்னையைப் பணிந்து வணங்குகிறேன்.

ஸ்ரீ அன்னைக்கும், ஸ்ரீ பகவானுக்கும், ஸ்ரீ அன்னையைத் தெரியவைத்த அனைத்து அன்பர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன்.

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பெரிய திட்டங்களை மனதிலிருந்து அகற்றினால்தான் பெரிய ஆன்மீக அனுபவங்கள் கிட்டும் என்கிறார் அன்னை. வளர்ந்த மனமுடைய மனிதன் எதையாவது செய்தபடி இருக்கும் மனநிலையையே அன்னை இங்குக் குறிக்கின்றார்.

***திட்டங்கள் விலகினால் அனுபவம் கிட்டும்.***

# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**847) நம் சரணாகதியின் முழுப்பொறுப்பை ஏற்பது, அகந்தையை முழுமையாக அழிக்க முன்வந்து, யோக முயற்சியில் முதிர்ச்சி அடைவதாகும்.**

*முழுமையின் பொறுப்பு, முழுப்பொறுப்பு.*

- ✡ யோகத்தை ஏற்றவர்க்குச் சரணாகதி நினைவுவருவதில்லை.
- ✡ இந்த ஜன்மத்தில் யோகத்தை ஏற்றால், அடுத்த ஜன்மத்தில் சரணாகதி நினைவுவரும்.
- ✡ மனிதன் 500 ஆண்டுகளாகச் சாதித்ததை, தொடர்ந்து சாதிப்பதை அறியவோ, நினைவுகூரவோ முன்வருவதில்லை. அடுத்த 30,000 ஆண்டுகளில் நடக்கப்போவது இப்பொழுது எப்படி நினைவுவரும்?
- ✡ அரும்பாடுபட்டு, அதுவே இலட்சியமாக இரவும், பகலும் வாழ்ந்தால் நமக்குச் சரணாகதி நினைவுவரவில்லைஎன 10, 20 வருஷங்கள் கழித்துத் தோன்றும்.
- ✡ எந்தச் செயலும் சரணாகதியை நினைவூட்டவேண்டும்என இடைவிடாது முயன்றாலும், சரணாகதி மறந்துபோகும்.
- ✡ சரணாகதி நினைவுவந்தால், எண்ணம் அதை விலக்க வெளிப்படும்.
- ✡ எண்ணத்தையும், உணர்வையும், செயலையும், ஜீவனையும் விலக்கிச் செயல்பட்டால் சரணாகதி பலிக்கும்.
- ✡ சரணாகதி பலித்தால் அவன் பிரம்மமாவான்; பிரம்மமாக சிருஷ்டியில் ஜனிப்பான்.
- ✡ அது பகவானும், அன்னையும் எய்திய யோகநிலைகள்.
- ✡ ரிஷிகள் அப்படியொரு நிலையுண்டுஎன நினைக்காத யோகநிலை.
- ✡ பகவானை நம்மால் அறியமுடியவில்லை.



- ✡ அவர் எழுதியது புரியவில்லை.
- ✡ எப்படி நாம் அவர் பெற்ற யோகசித்தியை அடையமுடியும்?
- ✡ அதுவும் முடியும்என்கிறார் அன்னை.
- ✡ நம்மை மறந்து பகவானைமட்டும் நம்பினால் முடியும்என்கிறார்.
- ✡ நம்மை விடவேண்டும்என்ற நிபந்தனை நமக்கு முடியவில்லை.
- ✡ அதை taste of ignoranceஎன்கிறார்.
- ✡ அஞ்ஞானம் ருசிக்காமல், ஞானத்தின்மீது எண்ணம் செல்வது நடக்காததை நடத்திவைக்கும்.
- ✡ சரணாகதிக்குமுன் சமர்ப்பணம் பலிக்கவேண்டும்.

❀❀❀

**848. நல்லது, கெட்டதான புறநிகழ்ச்சிகளை அகவுணர்வால் புரிந்துகொள்வது ஞானம். நல்லவை உள்ளுணர்வை நேரடியாகவும், கெட்டவை தலைகீழேயும் பிரதி பலிக்கின்றன.**

*உள்ளுணர்வைப் பிரதிபலிக்கும் புறநிகழ்ச்சிகள்.*

- ✡ புறம் அகத்தைப் பிரதிபலிப்பது வாழ்வில் யோகத்திற்குரிய உண்மை.
- ✡ கோபமாக மனைவியைத் திட்டிவிட்டு ஆபீஸுக்குப்போனால், மானேஜர் கோபமாகத் திட்டுவது நேரடி பிரதிபலிப்பு.
- ✡ மனைவிமீது கோபமாக வெளியில்போனவன், வழியில் சந்திப்பவர்மீது தன் கோபத்தைக்காட்டுவது இயற்கை.
- ✡ மனைவி கணவனைத் திட்டி, ஆபீஸுக்கு அனுப்பினால், ஆபீஸுக்குப் போன கணவனை அங்கு உடன் வேலைசெய்பவர் திட்டுவதும் பிரதிபலிப்பு. பலஹீனமானவன் இரண்டு இடங்களிலும் திட்டு வாங்குகிறான். பலமானவன் இரண்டு இடங்களிலும் திட்டுகிறான். நிலைமை மாறினால் திட்டுவது, திட்டுவாங்குவதாக மாறுகிறது.
- ✡ நல்ல உணர்வு, புறத்தில் நல்ல செயலாகவும்,
- ✡ நல்ல உணர்வு, புறத்தில் கெட்ட செயலாகவும்,

- ✡ கெட்ட உணர்வு, புறத்தில் கெட்ட செயலாகவும்,
- ✡ கெட்ட உணர்வு, புறத்தில் நல்ல செயலாகவும், பிரதிபலிப்பது சட்டம்.
- ✡ சட்டத்தை இயக்குவது நமது பலம், அந்தஸ்து, மனத்தெளிவு, ஆன்மவிழிப்பு.
- ✡ ரூ.10/- பக்கத்துவீட்டுக்காரருக்குத் தரவேண்டியது பாக்கியானால் நமக்கு வரவேண்டிய பத்தாயிரம் பாக்கியாகும். 10 ரூபாயைக் கொடுத்தவுடன் 10,000 வருகிறது. ஏனெனில், பக்கத்து வீட்டுக்காரருக்கு 10 ரூபாய், அடுத்தவருக்கு 10,000 ரூபாய்க்குச் சமம்.
- ✡ ஒருவருக்கு நம்மீது பிரியம்வந்தால் திட்டுகிறார். அவருக்குப் பிரியத்தை அப்படித்தான் காட்டமுடிகிறது. இது அடிமனத்திற்குரிய உண்மை. நடைமுறையில் நம்பமுடியாதது.
- ✡ நமக்குப் பெருந்தொகை இழக்கும் சந்தர்ப்பம் சூழலில் வந்துவிட்டால், அந்த நேரம் நமக்குத் தோன்றும் விஷயங்கள்:
  - ❀ *ஓர் அயோக்கியனுக்குச் சிறு தொகை உதவத் தோன்றும்.*
  - ❀ *ஒரு நல்லவன் செய்த நல்ல காரியத்தைத் தவறுஎனப் பேசத் தோன்றும்.*
  - ❀ *ஓர் அரசியல்வாதி செய்த பெரிய மோசடியைச் சரிஎன வாதிக்கும் சந்தர்ப்பம் எழும்.*
  - ❀ *ஒரு நல்ல குழந்தையின் நல்ல ஆசையை மறுக்கத் தோன்றும்.*
  - ❀ *விஷயமே இல்லைஎன்றாலும், மனம் அப்படியெல்லாம் நினைக்கும்.*

❀❀❀

*தொடரும்.....*

**ஜீவிய மணி**

**பட்டதிற்குரியது படபடப்பு;**

**கண்ணில்படாதது சேவைசெய்யும்.**





**P.53 Too seldom is the shadow of what must come.**

**எதிர்கால நிகழ்ச்சிகள் எட்டிப்பார்க்கும் நிழல்.**

- ✡ இரகஸ்ய உணர்வு க்ஷணத்தில் பெறும் ரூபம்.
- ✡ புலப்படாதது தரும் அதிர்ச்சியான புத்துணர்வு.
- ✡ பதிலிறுக்கப் பலரில்லை.
- ✡ பிரபஞ்சத்தை இயக்கும் பிரம்மாண்டமான உறுதி.
- ✡ புலனறியும் புது ரூபம்.
- ✡ உலகை அறியும் உள்ளுணர்வு.
- ✡ நமது எல்லையான கூட்டமான வட்டம்.
- ✡ பார்த்து, தொட்டு, நினைத்து யூகிப்பது.
- ✡ அரூபியின் ஜோதி அரிதாக மலரும்.
- ✡ தீர்க்கதரிசனம் விழித்தெழுந்தது.
- ✡ புறம் நமது புலன்.
- ✡ அழிந்துபோன காலம் ஆதரவான பின்னணி.
- ✡ ஆத்மா மனத்துள் சிறைப்பட்டுள்ளது; நாம் நம் செயலின் அடிமை.
- ✡ பார்வையின் திரையை விலக்கி விவேகத்தின் சூரியஜோதியை எட்டமுடியும்.
- ✡ விலங்கு மனத்தின் விபரீத வாரிசு.
- ✡ மனிதன் இயற்கையின் இரும்புக்கரங்களின் குழவி.
- ✡ நகரும் மணித்துளியின் நளின வாழ்வு.
- ✡ குறுகிய நியாயம் குலவும் நிகழ்காலம்.
- ✡ பேயான கடந்தகாலம் பெயர்ந்துவரும் நினைவு.
- ✡ எதிர்காலம் ஏகவேகமாக விலகுகிறது.

✡ **காண்பது கற்பனைக்குரிய உடை, முகமன்று.**

✡ **நிலையற்ற சிறுசக்தி நிலையான ஆயுதம்.**

✡ **எதிரான சந்தர்ப்பத்தின் பலனைக் காக்கிறான்.**

✡ **உழலும் அறியாமை அறிவுக்குத் துணை.**

✡ **செய்ததின் பலனைச் செறிவாகச் சேர்ப்பது.**

✡ **எண்ணத்தின் பலனை எடைபோட்டுப் பார்க்கிறான்.**

✡ **என்ன பலன் வரும், எப்பொழுது வரும்என அவன் அறியான்.**

✡ **முடிவாகப் பிழைப்பானாஎனவும் அறியமாட்டான்.**

✡ **மறைந்த விலங்கென மறைவானாஎனவும் தெரியாது.**

✡ **அரசாண்ட இடத்திலேயே அழிவானா?**

✡ **வாழ்வின் கருத்து அவன் அறியாதது.**

✡ **அழியாத சிகரத்தின் அமரர்கள்;**

✡ **காலத்தையும், இடத்தையும் கடந்த வாழ்வு;**

✡ **சிந்தனையிலிருந்து விடுபட்ட வாழ்வின் தலைவர்கள்.**

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மாயை வரையறுக்கிறது; மனம் துண்டாடுகிறது; அறியாமை அறிவைவிட்டு விலகி ஒருமைப்படுகிறது. அகந்தை சேகரம் செய்கிறது. அகந்தை ஒரு பிறப்புக்குரியது. மற்றவை பொதுவான சக்திகள். பிறவி முடிந்தாலும் தொடரும்.

***மாயையும், மனமும், ஞானமும் அகந்தையைக்கடந்த அதிகாரமுள்ளவை.***





# மனமாற்றம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

இல. சுந்தரி

“சரி! சரி! உன்னிடத்திற்கு வா”என்றார் குமாரி. வேறு வழியின்றி ஆஷா தன் சீட்டிற்கு வந்தாள். ‘‘உன் இடம்என்று சாசனம் செய்திருக்கிறதா?”என்று தான் அகம்பாவமாய்க் கேட்டதும், இப்போது மிஸ் பிரியாவிடம், “உன் சீட்டிற்கு எழுந்துவா”என்று கூறியதும் நினைத்து அவமானமாய் உணர்ந்தாள். ஆஷாவின் தோழிகள் ஒருவரையொருவர் பொருளோடு பார்த்துக்கொண்டனர். குமாரியும் அதைக் கவனிக்கத் தவறவில்லை.

வகுப்பு முடிந்து குமாரிமிஸ் வெளியேறினார். அடுத்த மிஸ் வருவதற்குள் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. ஆஷாமட்டும் ‘உம்’மென்றிருந்தாள். இப்படிக் குமாரிமிஸ் கேட்பாரென்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை. மாதவியுடன் சேரவேண்டும், பிரியாவை அவளிடமிருந்து பிரிக்கவேண்டும் என்ற அவள் விருப்பம் நிறைவேறாதது எரிச்சலாயிருந்தது.

வகுப்பில் முதல் மாணவியான அவள், அன்றிலிருந்து சரியாகப் பாடத்தைக் கவனிப்பதில்லை. எல்லா ஆசிரியர்களும் அவளைக் கவனித்தனர்.

இத்தனை நாட்களாய்ப் பிரியாவை மறைமுகமாய்க் கேலிசெய்வாள். மாதவியுடன் அவள் சிநேகிதமாய் இருப்பதுகண்டு அப்படிச்செய்தாள். மாதவி படிப்பிலும், பண்பிலும் நிகரற்று விளங்கினாள். எல்லா

ஆசிரியர்களுக்கும் அவள் செல்லப்பெண்போலிருந்தாள். ஆஷாவிற்குப் பொறாமை. அவளை எதிர்க்கலாம்என்றால் மாதவி எதையும் பெரிதுபடுத்தாத பெருந்தன்மையோடிருந்தாள். எனவே, நட்புக்கொள்ள நினைத்தால், இடப்பிரச்சினை வந்துவிட்டது.

மாதவியோ, தன்னைச் சுற்றியே ஆஷாவும், பிரியாவும் சுமுகமில்லாமல் இருப்பது அறியாமல் பாடத்திலேயே கவனமாயிருந்தாள்.

சுட்டிப்பெண்ணான ஆஷா, யாருக்கும் அடங்காத ஆஷா, திடீரென சோர்ந்துபோனாள். அவளுக்குப் போட்டியாக அறிவிலும், திறமையிலும் சிறந்த மாதவி அந்த வருடம், அந்த வகுப்பில் சேர்ந்ததுதான் அவள் சோர்விற்குக் காரணம்என்று மற்ற மாணவிகளுக்குப் புரிந்தது. ஆனாலும், அவள் தானே சர்வாதிகாரியாய் விளங்கியதை உள்ளூர விரும்பாத தோழியர் இப்போது அவள் சோர்வுகண்டு உள்ளூர மகிழ்ந்ததால் அவளை மாற்ற ஒருவரும் முயலவில்லை.

அரையாண்டுத் தேர்வு முடிந்து மதிப்பெண் பட்டியல் வந்தது. மாதவி முதலாவது, பிரியா இரண்டாவது, ஆஷா மூன்றாவதாக வந்திருந்தனர். எல்லோர்க்கும் இது அதிர்ச்சியாயிருந்தது. எல்லா ஆசிரியர்களும் ஆஷாவைத் தனித்தனியே அழைத்து, "ஏன் படிப்பில் கவனமில்லை?"என்று விசாரித்தனர். உள்ளே தோற்றுக்கொண்டிருந்த ஆஷா பதில் சொல்லாது இயல்பான பிடிவாத குணத்தால் நின்றாள்.

அன்று ஆசிரியர் அறையில் 11அ வகுப்புப் பற்றிய பேச்செழுந்தது. ஆஷாவின் வீழ்ச்சியே அன்றைய பேச்சு. 'மாதவிஎன்ற பெண்ணின் உயர்வுக்குமுன் ஆஷாவின் சிறுமை ஆட்டங்கண்டது'என்பது தெரியவந்தது.

ஆனால் குமாரிமிஸ் இதைச் சாதாரணமாய் அலட்சியப்படுத்தவில்லை. ஒரு சிறந்த திறமையுள்ள மாணவி இப்படிச் சோர்ந்துபோவது குமாரிக்கு உடன்பாடில்லை. ஆஷாவை எப்படியாவது குணப்படுத்தவேண்டும்என்று எண்ணிக்கொண்டார்.



ரேங்க்கார்டு (rankcard) கொடுக்கும்போது மாதவிக்கு ஏகக் கைத்தட்டல். அடுத்தது பிரியாவுக்கு. ஆஷாவிற்குக் கைத்தட்டல் குறைந்தது.

ஆஷா முரட்டுப்பிடிவாதமுள்ள பெண். அவள் உடைந்துபோவாளேதவிர வளைந்துகொடுக்கமாட்டாள்என்று குமாரிக்குத் தெரியும்.

"ஆஷா! மாலையில் வகுப்பு முடிந்ததும் என்னைப் பார்த்துவிட்டுப் போ"என்றார் குமாரிமிஸ்.

"சரி மிஸ்!"என்று கூறி உட்கார்ந்தாள்.

மாலை பள்ளி முடிந்ததும் ஆஷா, குமாரிமிஸ்ஸைப் போய்ப் பார்த்தாள்.

"ஆஷா! நீ இன்று மாலை என் வீட்டிற்கு வருகிறாயா?"என்றார் குமாரி.

"வருகிறேன் மிஸ்!"என்றாள் ஆஷா.

"வீட்டில் சொல்லிவிட்டு வா. 6.30க்கு வந்துவிடு. நானே உன்னை வீட்டில் கொண்டுவிடுகிறேன்"என்றார்.

பிடிவாதக்காரியான ஆஷா எப்போதும் கலகலப்பானவள். எங்குச் சென்றாலும் தன் வெற்றிக்கொடி நாட்டிவிடுவாள். ஒரு கணம் அவளால் ஆரவாரமின்றி இருக்கமுடியாது. அவள் இராசியோஎன்னும்படி எல்லோரும் அவளுக்கு அடங்கிவிடுவர். ஆனால், திடீரென்று அவள் ஊமையானது வீட்டினர்க்கு வியப்பளித்தது. மகிழ்ச்சியாய்க், கலகலப்பாய்ப் பழகும் அவள் திடீரென்று எரிச்சல்பட ஆரம்பித்தது எல்லோருக்குமே வியப்பாயிருந்தது. அவள் எங்கோ தோற்றிருக்கிறாள்என்று புரிந்தது. ரேங்க்கும் மூன்றாவது. முதல் ரேங்க் மாணவி அவள். எத்தனைக் குறும்புகள் செய்தாலும் படிப்பில் வல்லவள். அதனால் கர்வமும் உண்டு. ஆனால் இப்போது மூன்றாமிடம்.

"அம்மா! நான் குமாரிமிஸ் வீட்டிற்குப் போகிறேன். அவரே திரும்பி என்னைக் கொண்டுவந்துவிடுவதாய்ச் சொல்லியிருக்கிறார். கவலைப்பட வேண்டாம்"என்று சொல்லி புறப்பட்டாள்.

குமாரிமிஸ் எங்கோ புறப்படத் தயாராகி, இவள் வருகைக்குக் காத்திருந்தார்.

"வா! ஆஷா! உன்னை எதிர்பார்த்துத்தான் காத்திருக்கிறேன்"என்று கூறி, தன் ஸ்கூட்டரில் அவளைப் பின்னே உட்காரவைத்து அழைத்துப் போனார்.

பிள்ளையார்கோயில் தெருவில் ஒரு வீட்டின்முன் வண்டியை நிறுத்தினார். இறங்கிக்கொண்டாள். முன்பக்கம் மாட்டியிருந்த 'காரிபேக்கை' அவளிடம் கொடுத்துவிட்டு வண்டியை ஓரமாய்வைத்துப் பூட்டினார்.

பையில் ஒரே மல்லிகைப்பூ மணம். யாரையோ பார்க்க இங்கு வந்திருக்கிறார்போலும். ஆனால் பூக்கள் கட்டப்படாது உதிரியாய் இருந்தன.

வீட்டின் முகப்பிலேயே சாம்பிராணிப்புகை தவழ்ந்துவந்து வரவேற்றது. அங்குள்ளோர் குமாரியைப் பார்த்துப் புன்னகைத்தனர். பெரிய நிலைக்கதவு திறந்திருந்தது. கதவைத் தாண்டியதும் நீண்ட, பெரிய ஹால். அதில் பெரிய இரண்டு திருவுருவப்படங்கள். அவற்றிற்கு எதிரே சீர்வரிசைபோல் அணி, அணியாக அழகிய தட்டுகளில் வகை, வகையான பூக்கள் அடுக்கப்பட்டிருந்தன. பெரிய 'வாட்டர்புரூப்' விரிப்பின்மேல் இரண்டு வடிவங்களில் மலரலங்காரம். ஒன்று, வட்டவடிவில் இருந்தது. மற்றது, நட்சத்திரம்போன்றவடிவில் இருந்தது. நறுமணப்புகையும், மலர்களின் தெய்வீக வாசமுமாய் தெய்வீக மணங்கமழ்ந்தன.

குழந்தைகள், இளம்பருவத்தினர், முதியவர்என்று பாகுபாடேதும் இல்லாது ஒருமித்து அனைவரும் செயல்பட்டனர். உள்ளே வரும் ஒவ்வொருவரும் ஏதேனும் மலர்களுடன் வருவதும், அழகுற அவற்றைச் சமர்ப்பிப்பதும், நமஸ்கரித்து அமர்வதுமாயிருந்தனர். குறிப்பாக, வாய்ப் பேச்சின்றி பார்வைகளால் அளவாகப் பேசிக்கொண்டனர்.

குமாரிமிஸ், இவள் தோளைத் தொட்டு, இவள் கவனத்தைத் திருப்பி, கையிலுள்ள மலர்களைச் சமர்ப்பிக்குமாறு சைகைசெய்தார். அவ்வளவுதான்; தன் கடந்தகணங்கள் யாவும் மறந்துபோயின. திடீரென உற்சாகம் பீறிட்டது; மலர்ச்சியானாள்.



முன்னே சென்று வட்டமும், நட்சத்திரமுமாய் அமைந்த வடிவங்களில் வெள்ளை மல்லிகையினைச் சுற்றி பார்டர் கட்டினாற்போல் அடுக்கினாள். கொண்டுவந்த பூக்கள் சரியாக அமைந்தன. ஒருமுறை அவற்றின் அமைப்பைப் பார்த்தாள். மனம் நிறைந்தது. அங்குள்ளோர் அவளைப் பார்வையால் பாராட்டினர். நமஸ்கரித்துவிட்டு குமாரியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு ஹாலைப் பார்த்தாள்.

ஹாலின் நடுவில் எல்லோரும் பார்க்குமாறு ஒரு பெரிய கடிகாரம் பொருத்தப்பட்டிருந்தது. எல்லோர்க் கவனமும் அதை நோக்கியது. ஹாலின் சுவர்களில் இரண்டு பக்கங்களிலும் நடுவே உள்ள திருவுருவங்களின் வேறு, வேறு போஸ்கள் அழகாகப் பொருத்தப்பட்டிருந்தன. கண்களும், இதயமும் தாமாகவே நிறைவடையும் தூயஇடமாயிருந்தது அது. இது வீட்டுவிசேஷம் ஏதும் இல்லை. ஏதோவொரு வழிபாட்டுக்கூடம்என்று புரிந்துகொண்டாள் ஆஷா. மணி ஏழை *(7)* நெருங்கிக்கொண்டிருந்தது. மாதவியும் சில மலர்க்கொத்துகளுடன் வந்தாள். அவள் யாரையும் கவனிக்கவில்லை. மலர்களைச் சமர்ப்பித்து முன்புறத்தில் அப்படியே அமர்ந்துகொண்டாள். கடிகாரம் ஏழுமுறை ஒலித்ததும் பெரிய விளக்குகள் நிறுத்தப்பட்டு இரவு விளக்குபோன்ற சிறிய பச்சை ஒளிமட்டும் தெரிந்தது. ஓர் ஒலிநாடா மெல்லிய இசையை ஒலித்தது. அனைவரும் கண்ணைமூடி அமர்ந்திருந்தனர். ஆஷாவும் அன்று தன் மனஆரவாரங்கள் அடங்கி அமைதியாய்க் கண்மூடி, சற்றுமுன் கண்ட திருவுருவங்களையும், மலர்களையும் நினைத்தவண்ணமிருந்தாள். ஒலிநாடா நின்றது. விளக்குகள் பிரகாசித்தன. கடிகாரம் ஒரு முறை ஒலித்தது. அமைதியாக ஒவ்வொருவராய் முன்சென்று வணங்கி, மலர்களைத்தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டு தட்டுகளில் இருந்த மலர்களில் அவரவர் தமக்குத் தேவையான ஒரு மலரைப் பவித்திரமாய் எடுத்துச்சென்றனர். பேச்சுகள் ஏதுமின்றி அமைதியாய்க் கலைந்தனர். ரோஸ் நிறத்தில், பொடிப்பொடியாய், கொடிபோன்ற அமைப்பில் படர்ந்து ஜாடிகளில் வைக்கப்பட்ட பூவைச் சிறிது எடுத்துக்கொண்டாள் ஆஷா.

அன்னையை நன்றியுடன் பார்த்துக்கொண்டிருந்த குமாரி, ஆஷா சுமுகம்என்ற மலரை எடுப்பதைப்பார்த்து மிகுந்த நெகிழ்ச்சியுடன்

அன்னையைப் பொருள்பொதியப் பார்த்தார். கடந்த சில மாதங்களாகவே குமாரி ஸ்ரீ அன்னையுடன் உள்ளூர ஒரு தொடர்புகொண்டு அன்னையின் சாந்நித்யத்தை உணர்ந்துவந்தார்.

ஆஷாவிற்குப் பாடம், தேர்வு, தோல்வி, பகைஎன்ற எல்லாவுணர்வுகளும் மறைந்து, ஏதோ இனம்புரியாத அமைதியுணர்வு ஏற்பட்டது. வெளியே வந்தனர். மாதவியைக் காணவில்லை. போயிருப்பாள் போலும்.

“மிஸ்! இந்த இடத்திற்கு என்ன பெயர்? இங்கு எதற்கு வந்தோம்?” என்றாள் ஆஷா.

“நீ எப்படி உணர்ந்தாய்?”என்று குமாரி இவளைக் கேட்டார்.

“மிகஅமைதியாக உணர்ந்தேன் மிஸ். வேறு எந்தச் சிந்தனையும் வரவில்லை”என்றாள்.

“இந்த இடத்திற்கு ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் தியானமையம்என்று பெயர். இங்கு எதற்காக வந்தோமோ, அது உனக்குக் கிடைத்திருக்கிறது” என்றார் குமாரி.

“மிஸ்! மாதவியும் வந்திருந்தாள், பார்த்தீர்களா?”என்றாள் ஆர்வமாக.

“அவள் எப்போதும் வருவாள்”என்று மிகஇயல்பாகக் கூறினார் குமாரி.

இங்கு உறவுமுறைகள் எதற்கும் முக்கியத்துவமில்லைஎன்பது புரிந்தது.

“ஸ்ரீ அரவிந்தர் என்கிறீர்களே மிஸ், அவர் சுதந்திரப்போராட்ட வீரர்என்றுதானே படித்தோம்?”என்றாள் ஆஷா.

*தொடரும்.......*

❀❀❀





**A new consciousness of intuition or overmind begins to form in place of the mental consciousness.**

**மனத்தில் ஞானம் உதயமாகி, தெய்வஜீவியம் சேரும் நிலை எழுகிறது.**

- ✡ **சத்தியஜீவியம் புவிக்கு வந்தபொழுது முதலில் மனத்தைத் தீண்டுகிறது. ஏனெனில், மனமே அதிக விழிப்புடையது. உடல் இருண்டிருப்பதால் உடலோ, உணர்வோ சத்தியஜீவியத்தை ஏற்க முடிவதில்லை.**
- ✡ **யோகி மேலே சென்று (ascent) சத்தியஜீவியத்தைத் தொட்டபின், அது புவிக்கு வரும் (decent). அப்படி வரும்பொழுது மனத்தைத் தீண்டி, மனத்தைவிட உயர்ந்த ஜீவியத்தை - யோகி, தெய்வத்திற் குரியவற்றை - ஏற்படுத்தும்.**
- ✡ **Overmindஎன்பது தெய்வங்கள் - விஷ்ணு, சிவன், இந்திரன், காளி, சரஸ்வதி - வாழும் இடம். Intuition ஞானம்என்பது யோகிக்குரிய நிலை.**
- ✡ **உடலால் உழைப்பவன் படித்தால், மனம் தெளிவடைகிறது; உடலில் உள்ள அணுக்களில் மனம் உதயமாகும். அதுபோல் சத்திய ஜீவியத்தை நோக்கி மனம் உயர்ந்தால், மனத்தில் சத்தியஜீவியம் உதயமாகும். அதன்முன் தெய்வஜீவியமும், ஞானமும் உதயமாகும்.**
- ✡ **மனித நிலை,**
  - ❀ **ஒரு பிரச்சினை வந்தவுடன் மனம் யோசனை செய்வது மனித நிலை.**
  - ❀ **ஆசையோ, கோபமோ எழுவது விலங்கு நிலை.**

❀ **ஆசை, கோபம்போன்ற உணர்வுகள் எழாமல், யோசனையும் பிறக்காவிட்டால், அது ஜடத்திற்குரிய நிலை.**

❀ **மௌனம் தானே குடிகொள்வது முனிவர் நிலை.**

❀ **பிரச்சினை மனத்தில் காட்சியாக எழுவது ரிஷியின் நிலை.**

❀ **உடனே யோசனையுமின்றி, பிரச்சினை முழுவதும் புரிவது யோகி நிலை.**

❀ **புரியும் அவசியமுமில்லாமல் தெரிவது தெய்வ நிலை.**

❀ **புரியாமல், தெரியாமல் பிரச்சினையுடன் இரண்டறக்கலந்து திளைப்பது சத்தியஜீவிய நிலை.**

✡ **சத்தியஜீவியத்தைக்கடந்த நிலைகள் ஆனந்தம், ஜீவியம், சத், பிரம்மமாகும்.**

✡ **எந்த உயர்ந்த நிலையையும் நிஷ்டையில் ஒரு க்ஷணம் எட்ட மனிதனால் முடியும்.**

✡ **பெற்றதை நிரந்தரமாக அனுபவிக்க அனுபவம் (experience) சித்தியாக மாறவேண்டும்.**

❀❀❀

***ஸ்ரீ அரவிந்த சுடர்***

உள்ளே போவதைவிட உள்ளே அன்னையைத் தேடுவது நன்று. ஆன்மா அன்னையை உள்ளே தேடுவது ஆனந்தம் (bliss). அறிவாலும், செயலாலும் அன்னையை புறத்தில் தேடுவது சிருஷ்டியின் ஆனந்தமாகும் (delight).

***சிருஷ்டியின் ஆனந்தம்.***





# கம்ப்யூட்டர்

கம்ப்யூட்டரை அனைவரும் அறிவர். ஆனால் அது நம் தொழிலை இருமடங்காக்கும்என எவரும் அறியவில்லை. அப்படிச் சொன்னால் நம்பமாட்டார்கள். அத்துடன் கேலி செய்வார்கள். ஒரு கம்பனியில் கணக்கு முடிக்க, வருஷம் முடிந்தபின் பல மாதங்களாகும். கம்ப்யூட்டர் வருஷம் முடிந்தவுடன் கணக்கை முடித்துவிடும். கம்பனியில் எங்கு, என்ன நடக்கிறதுஎனத் தெரிய நாளாகும். பல சமயம் தெரியாது. தூர நடக்கும் விஷயங்களை நாம் மறந்துவிடுவோம். அங்கு நஷ்டம் ஏற்பட்டு சுமையாகி பிரச்சினையாகும். கம்ப்யூட்டர் எங்கு நடப்பதையும் உடன் தன் ஸ்கிரீனில் காட்டும். எந்தக் கம்பனியிலும் ஸ்டோரில் இருப்பதை முதலாளி அறியார். வேண்டிய பொருள்களை வாங்கிக்கொண்டிருப்பார். அவை ஸ்டோரில் இருப்பதை அவர் மறந்துபோயிருப்பார். ஸ்டோருக்குப் போனால் ஒரு கோடி கம்பனிக்கு ஸ்டோரில் 12 இலட்சம் சரக்கு இருக்கவேண்டுமானால் 15 இலட்சமிருக்கும். சில சமயங்களில் 40 இலட்சமுமிருக்கும். பணம் ஸ்டோரில் முடங்கியிருக்கும். அப்பணத்தை முதலாளி வெளியில் கடன் வாங்கி வட்டி கொடுப்பார். அந்த வட்டி நிர்வாகம் சரியில்லாத கம்பனிகளில் முழு இலாபத்திற்குச் சமமாக இருக்கும். ஒரு சிறு கம்பனியில் **EB** பில் 10 மாதத்திற்குரியது ஒரு மாதத்திற்குத் தவறாக வந்தது. மானேஜர் கட்டிவிட்டார். அது முதலாளிக்குத் தெரியாது. எந்தக் கம்பனியிலும் **EB** பில் மாதத்திற்கு எவ்வளவு வரவேண்டுமென்று தெரியாது. அதிகமாகக் கட்டுவது வழக்கம். கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக்கொண்டு உஷாராக இருக்கும் முதலாளிகள்தவிர மற்றவர் அனுபவிக்கும் சிரமங்கள்

ஆயிரம். கம்ப்யூட்டர் எவ்வளவு கட்டவேண்டும்என்று சொல்லும். என்று 1 ரூபாய் அதிகமாகக் கரண்ட் செலவானாலும் காட்டும். கம்ப்யூட்டர் பணத்தைப் பலவகைகளிலும் சேகரம்செய்யும்.

கம்பனியில் நேரம் பணம். டெலக்ஸ் இருந்தபொழுது 100 கோடி கம்பனியில் ஒரு டிபார்ட்மெண்டிலிருந்து அடுத்த டிபார்ட்மெண்டிற்குச் செய்தி போய் பதில்வர 5 மணி முதல் 5 நாட்கள்வரை தாமதமாகும். 100 கோடி செலவானால் அக்கம்பனி time 1 நாளைக்கு 30 இலட்சம்பெறும். 8 மணி நேரம் வேலை செய்வதால் அக்கம்பனியில் 1 மணி நேரம்என்பது சுமார் 4 இலட்ச ரூபாயாகும். செய்தி தாமதமாவது சராசரியில் 30 மணி நேரமாகிறது. தாமதமாகும் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் 4 இலட்சம் நஷ்டமாகிறது. கம்ப்யூட்டர் இந்தத் தாமதத்தை அடியோடு விலக்கும். இந்தக் கம்பனி நஷ்டத்தில் நடக்கிறது. கம்ப்யூட்டரை இந்த ஒரு காரியத்திற்கு முழுவதும் - perfectஆக - பயன்படுத்தினால் கம்பனி நஷ்டத்திலிருந்து இலாபகரமாக மாறும்.

கம்பனிகளில் வதந்தி ஏராளம். நிர்வாகத்தைப்பற்றி பணம், ஊழல், இலஞ்சம், பாரபட்சம் ஆகியவற்றில் சந்தேகம் ஏராளம். எதையும் ஊழியர்கள் சந்தேகப்படுவார்கள். எந்தப் பிரச்சினையுமில்லாதபொழுது இந்த வதந்தியும், சந்தேகமும் சேர்ந்து ஸ்டிரைக் வந்து, அவற்றைப்போக்கிச் சமரசம் செய்வதற்குள் பல கோடி நஷ்டமாகும். கம்ப்யூட்டரில் (இண்டர்நெட்) இவ்விவரங்களைக் குறித்துவிட்டால், எந்த ஊழியரும் உண்மையை தம் மேஜையில் காண்பார். பெரிய தலைவலி விலகும்.

✡ *கம்ப்யூட்டர் இலாபத்தை இருமடங்காக்கும்எனக் கூறினோம் - எப்படி?*

- *கம்ப்யூட்டர் நேரத்தை மிச்சப்படுத்தும்; நேரம் பணம்.*
- *பண முடக்கத்தைக் கம்ப்யூட்டர் விலக்கும்; வட்டி மிச்சம்.*
- *வதந்தியை விலக்குவதால் சந்தேகம் நம்பிக்கையாகும்.*
- *ஊழியர்கள் தங்கள் சம்பளம், P.F. லோன் விவரங்களை அறிய ஆபீசுக்கு நடையாக நடக்கவேண்டும். அதனால் சண்டை, சச்சரவு வரும். சந்தேகம் எழும். அவை அதிகப்பட்டால் ஸ்டிரைக் வரும். கம்ப்யூட்டர் அவற்றை விலக்குவதால் சுமுகம் ஏற்பட்டு பணவரவு வளரும்.*
- *கம்பனிக்கு வாடிக்கைக்காரர்கள், ‘‘நான் கூறியபடி ஆர்டர் வரவில்லை, நீங்கள் அனுப்பிய 15 பொருள்களில் 3 காணோம்’’ என்பனபோன்ற குறைகள் ஏராளம். இதனால் கம்பனியில் உற்பத்தி செய்வதைவிட கம்ப்ளெயிண்டுக்குப் பதில் சொல்வதே சரியாக இருக்கும். அதிருப்தியால் வாடிக்கைக்காரர்கள் வேறு கம்பனிக்குப் போவார்கள். கம்ப்யூட்டர் அவற்றை எல்லாம் விலக்கும். வாடிக்கைக்காரர் திருப்திப்பட்டு அதிக ஆர்டர் கொடுப்பார். அவர்மூலம் புதிய வாடிக்கைக்காரர்கள் வருவார்கள்.*

கம்ப்யூட்டர் வரப்பிரசாதம். நம்மைச் சிந்திக்கவைக்கிறது. நாம் மறந்ததை நினைவூட்டுகிறது. நேரம் விரயமாவதைத் தடுக்கிறது. பொருள்கள் முடங்குவதை விலக்குகிறது. அனாவசியமாகக் கடன் பெறுவதை நிறுத்துகிறது. கம்பனியின் இலாபத்தை இருமடங்காக்கும் கருவி கம்ப்யூட்டர். குடும்பவாழ்விலும் அதுவே உண்மை. கம்ப்யூட்டரை வீட்டு நிர்வாகத்திற்குச் சிறப்பாகப் பயன்படுத்துவோர் வருமானம் இருமடங்காகும். கம்பனியில் சொல்வதைப்போல் எளிதாகச் சொல்ல முடியாது. கூர்ந்து புரிந்துகொள்பவருக்குப் பலிக்கும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**அகந்தையைச் சரணம் செய்வது பெரிதன்று. அகந்தை தானே தன்னைச் சரணம்செய்ய முன்வருவது பெரியது.**

**Mind does not understand as it dramatises.**
**Even material suffering is illusory.**
**You don't know what is consciousness**
**till you know That.**

**நடிப்பதால் மனம் புரிந்துகொள்ளும் திறனை**
**இழந்துவிட்டது.**
**உடலின் வேதனையும் வேதனை இல்லை.**
**பிரம்மத்தை அறியும்வரை ஜீவியத்தை அறியமுடியாது.**

நாடகத்தில் எந்த வேடம் போட்டாலும், இறந்துவிட்டாலும், அது நாடகமே; உண்மையில்லை. **துன்பம் படைக்கப்படாத உலகில் எதைத் துன்பம்என ஜோடித்தாலும் அது துன்பமாகாது. மனம் ஆதியிலிருந்து பிரிந்து, உள்ளதை உள்ளபடிக் காணாமல் தன் மனம்போலக் காண்பதில் வலி, நோய், துன்பம், வேதனை, தீமை நமக்குத் தெரிகிறது.** மாற்றலாகிப் போகும்பொழுது சிறுகுழந்தை தெருவில் சுற்றும் நாயுடன் பிரியமாகப் பழகியதால் அதைவிட்டுப் பிரிய மனமில்லாமல் அழுதால், நாம்,

- ❀ *இரண்டு நாளானால் சரியாகிவிடும் என்கிறோம்.*
- ❀ *வேறொரு நாயைப் பார்த்தால் இதை மறந்துவிடுவான்என நினைக்கிறோம்.*
- ❀ *10 நாட்கள் கழித்து வேறொரு நாயுடன் விளையாடும் அதே குழந்தைக்குப் பழைய நாய் மறந்துபோகிறது, நினைவூட்ட முடிய வில்லைஎன்று காண்கிறோம்.*



நாயின் மீதுள்ள பாசம் அந்த நேரத்திற்குரியது. அந்த நேரத்திலில்லாத பெரியவர்க்கு நாய் வேதனை தருவதில்லை. உடல் வேதனைப்படுகிறது என்பது உடல் ஓர் அனுபவம்பெறுகிறது. உடல் படாத வேதனையை மனம் அதற்கு வேதனைஎன ஜோடித்துக்காட்டுகிறது.

**வேதனை உடலுக்கன்று; மனத்திற்கு.**

**மனத்திற்கும் வேதனையில்லை; மனப்பான்மைக்கு.**

**மனப்பான்மை மாறினால், மனம் வேதனைப்படாது.**

போரில் கை ஒடிந்தால் வீரனுக்கு வலி தெரிவதில்லை. நமக்குத் தெரிகிறது. வலி உண்மையானால், எப்படி வீரனுக்கு வலிக்கவில்லை? வீரனுடைய மனப்பான்மை வலியை உணரவில்லை. உண்மை வலியில் இல்லை என்பதே.

- ❀ *கோர்ட்டில் ஒரு கட்சி தோற்கிறது. நியாயம் ஜெயிக்கிறது.*
- ❀ *நியாயத்திற்குத் தோல்வியில்லை.*
- ❀ *தோல்வி உலகிலில்லைஎன்பதை நியாயம் அறியும். அநியாயம் அறியாது.*

ஒரு விஷயத்தை அறிய நாம் அதைவிட உயர்ந்திருக்கவேண்டும். சிறுகுழந்தைக்கு விளையாட்டுப்பொருள்கள் தெரியும். அதன் விலை புரியாது. தான் சம்பாதிக்க ஆரம்பித்தபின்தான் விலை புரியும். எட்டு லோகங்களில் – பிரம்மம், ஜீவன், ஜீவியம், ஆனந்தம், சத்தியஜீவியம், மனம், வாழ்வு, ஜடம் – ஜீவியம் ஜீவனுக்கும் கீழேயுள்ளது. நாம் மனத்தில் இருக்கிறோம். மனம் ஜீவியத்திற்குக் கீழேயுள்ளது. ஜீவியம் புரிய ஜீவனை அடையவேண்டும். பிரம்மத்தையடைந்தால் நிச்சயமாகப் புரியும்.

❀❀❀

Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184) Postal Regn. No.TN/PMG(CCR)/114/03-05 Licensed to post without prepayment No.45/03-05

## அறிவிப்பு

இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.

## சொசைட்டியின் வெளியீடுகள்

ஆங்கில நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | Mental Peace of the Industrialist | ரூ. 30 |
| 2. | Sri Aravindam | ரூ. 40 |
| 3. | Luck | ரூ. 50 |
| 4. | A Discussion on The Life Divine | ரூ.100 |
| 5. | Life & Teachings of Sri Aurobindo and The Mother | ரூ.120 |
| 6. | Spirituality and Prosperity - I | ரூ.125 |
| 7. | Spirituality and Prosperity - II | ரூ.200 |
| 8. | Spirituality and Prosperity - III | ரூ.125 |
| 9. | Spirituality and Prosperity - IV | ரூ.125 |
| 10. | Spirituality and Prosperity - V | ரூ.125 |
| 11. | Spiritual Opulence | ரூ.200 |

மற்ற வெளியீடுகள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | தொழிலின் ஜீவன் | N. கண்ணன் | ரூ. 30 |
| 2. | தேடிவரும் யோகம் | பிரித்திவ் | ரூ. 50 |
| 3. | திருவருளே தீராத செல்வம் | N. அசோகன் | ரூ. 75 |
| 4. | திருவடி தரிசனம் | N. அசோகன் | ரூ. 75 |
| 5. | அருளோவியம் | N. அசோகன் | ரூ. 80 |
| 6. | பக்தியும் சேவையும் | N. அசோகன் | ரூ.100 |
| 7. | சத் பிரம்மம் | விசாலம் | ரூ. 20 |
| 8. | ஐம்பது இலட்சம் | சமர்ப்பணன் | ரூ. 50 |
| 9. | $ 100,000 | William Learner | ரூ. 50 |
| 10. | Honey, Let's Make Money | Ken Gold | ரூ.150 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

# தரிசன போட்டோ

ஸ்ரீ அரவிந்தர் மாடியில் அவரறை, அடுத்து வராண்டா உண்டு. அதற்குமுன் ஒரு ஹால் உண்டு. இந்த ஹாலின் கிழக்குப்பகுதியில் ஒரு சோபாமீது அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் உள்ள ஒரு போட்டோ உண்டு. அவர்கள் தரிசனம் தரும்பொழுது எடுத்த போட்டோ என்பதால், இது தரிசன போட்டோவாக வழங்குகிறது. 1950-ஆம் ஆண்டு பிரான்சிலிருந்து அமெரிக்கப் பத்திரிக்கை Lifeக்காக வேலை செய்யும் போட்டோகிராபர் வந்திருந்தார். அவர் ஆசிரமப்பகுதிகள் அனைத்தையும் போட்டோ எடுத்தார். தரிசனச் சமயம் போட்டோ எடுக்க விரும்பினார். அந்த அறையில் போதுமான வெளிச்சமில்லாததால், உள்ள வெளிச்சத்திலேயே போட்டோ எடுக்கவேண்டும்என்ற நிபந்தனைமீது எடுத்ததால், போட்டோ பளிச்சென இல்லை.

- ✡ **இந்த போட்டோவில் அன்னை, பகவான் வலப்புறம் வீற்றிருக்கிறார்.**
- ✡ **பகவான் நம் நாட்டு மரபுகளை அறியாதவர்; தெரிந்த இடங்களிலும் பின்பற்றாதவர்.**
- ✡ **வெளிநாட்டில் படித்ததால் அந்த நாட்டு மரபையும் பின்பற்றாதவர்.**
- ✡ **எந்த மரபையும் விலக்கியது ஸ்ரீ அரவிந்தம்.**
- ✡ **இந்திய மரபுப்படி கணவன்-மனைவி உட்கார சாஸ்த்திரம் உண்டு. இடப்பக்கம் பெண் அமர்ந்தால் அவள் குடும்பம் செய்யும் மனைவி. வலப்பக்கம் உட்கார அவள் ஈஸ்வரனுக்குரிய சக்தியாகவேண்டும்.**
- ✡ **''அன்னையின் வலக் கை தடையின்றி செயல்பட அவர் வலப்பக்கம் உட்காரவேண்டும்''என பகவான் ஒருமுறை கூறினார். சாதகர்களை ஆசீர்வதிக்க, அவர் காணிக்கையைப் பெற அன்னை கை நீட்டி செயல்படவேண்டியிருக்கும். பகவான் நடைமுறை விளக்கம் இது. இது நம் மரபுப்படி அன்னைக்கு சக்தியின் ஸ்தானத்தை அளிக்கிறது.**

இளைஞர்கள் தங்கள் திருமணத்தை தாங்களே நிர்ணயித்துக் கொள்வது இந்நாளில் ஓரளவுண்டு. அப்படி நடந்து முடிந்த திருமணங்கள், நடக்கத் தவறியவைகளில் முக்கியமான முடிவை எடுக்க அவர்கள் சந்தித்தது மறக்காது. அது மறக்கமுடியாத நேரம். மறக்கமுடியாத நிகழ்ச்சி. பெண்ணின் சம்மதம் பெற இளைஞன் விழையும் நேரம், மனத்தை அழகாகத் தொட்ட நேரம். அவர்கள் அந்நேரத்தை நினைவுகூர்ந்தால், பெண் உட்கார்ந்த இடம் அவர்கள் எதிர்காலத்தை நிர்ணயித்திருக்கும். பெண் இடப்பக்கமிருந்தபொழுது வந்த பதில் திருமணம் முடிய உதவும். வலப்பக்கமிருந்து கொடுத்த பதில் திருமணத்தில் முடிந்திருக்காது.

❀❀❀

# பணம் வசூல் செய்யக்கூடாது

அலெக்ஸாண்டர் இந்தியாமீது படையெடுத்தபொழுது ஒரு மகானைப் பற்றிக் கேள்விப்பட்டு தம்மை வந்து பார்க்கும்படி அழைத்தார். அவர் வர மறுத்தார். அலெக்ஸாண்டர் அவரைப் போய்ப் பார்த்தார். இது துறவறத்திற்குரிய நியதி. அன்னை ஆசிரமத்திற்காகப் பணம் வசூலிக்கவில்லை. வசூலிப்பதை அவர் அனுமதிக்கவில்லை. தானே நம்மைத் தேடிவரும் பணம் நம் பக்திக்குரியது. நாமே கேட்டுப்பெறுவது நம் தேவைக்குரியது. பணம் கேட்கக்கூடாது என்பது உண்மையானால் கேட்பது சரிஎன்பதும் உண்மை. எந்த உண்மைக்கும் எதிரான உண்மையும் உண்டுஎன்பது பகவான் வாக்கு. அன்னைக்காகப் பணம் கேட்கக் கூச்சப்படுவது தவறுஎன்று பகவான் கூறியுள்ளார். நாம் நமக்காகக் கேட்கவில்லை, இறைப்பணிக்காகக் கேட்கிறோம். அதற்குத் தயங்குவது தவறு. கேட்காமல் பெற்றதற்கும், கேட்டுப் பெற்றதற்கும் உதாரணங்கள் உண்டு. ரூ.10,000 பொற்கிழி வசூலிக்க முனைந்தவர் கொடுக்கக் கடமைப்பட்டவர்களைமட்டும் கேட்டார். மற்றவர்க்கு பொற்கிழியைப் பற்றித் தெரியாது. கேளாமல் வசூலானது மேலும் 2,35,000.

அன்னையை ஏற்றுக் கூலிவேலையிலிருந்து கம்பனி முதலாளியானவர் அன்னையை எல்லாம் கேட்பார்; எதுவும் தரமாட்டார். 30, 40 ஆண்டுகளில் அவர் காணிக்கைஎனக் கொடுத்ததில்லை. அன்னையிடம் உள்ள ஒருவர் அன்னைக்காகத் தாம் செய்யும் வேலைக்கு 2 இலட்ச ரூபாய் வேண்டுமென அன்னையைக் கேட்டார். அந்த நாட்களில் ஆசிரமத்தில் பணக்கஷ்டம் அதிகம். "நீங்கள் எனக்காகப் பணம் கொண்டுவந்தால், அந்த 2 இலட்சத்தை நான் தருகிறேன்''என்று அன்னை அவரிடம் கூறினார். அவர் காணிக்கையே கொடுத்தறியாத கம்பனி முதலாளியிடம் 2 இலட்சம் கேட்டார். 1972 ஜனவரி முதல் தேதி தாம் அப்பணத்தை அன்னைக்குக் காணிக்கையாகச் செலுத்துவதாக அம்முதலாளி கூறினார். ஜனவரி முதல் தேதி பகவான் நூற்றாண்டு ஆரம்ப வருஷம். அவர் சொன்னது 2 இலட்சம், கொடுத்தது 6 இலட்சம். ஆகஸ்ட் 15, அதே வருஷம், அதே முதலாளி 9 இலட்ச ரூபாய் காணிக்கையாகக் கொடுத்தார்.

- ✡ **கேட்பது தவறு.**
- ✡ **மனப்பான்மை சரியானால், கேட்கக் கூச்சப்படுவது தவறு.**
- ✡ **கேட்காமல் 10,000 வசூல் செய்யப்போனது, கேட்காமல் 24 மடங்கு உபரியாயிற்று.**
- ✡ **கேட்ட 2 இலட்சம் 15 இலட்சத்தை - 7½ மடங்கு - பெருக்கியது.**

**மனம் சரியானால், செயல் சரியாக இருக்கும்.**

❀❀❀